ரூபா89/- ASIAN EDITION VOL 7

# கணினிக்களம்

05/2010 நவீன தொழில்நுட்ப ஆய்வுச் சஞ்சிகை




## கேளுங்கள் வாசிக்கப்படும்

மையில்லாத பிறின்டர்கள்



ஒட்டகத்தைப்போல ஒரு மின்கலம்



(மாதம் ஒரு தடவை மின்னேற்றினால் போதும்)




3SIM கைபேசி

# Contents


## நீங்களும் மந்திரவாதியாகலாம்

உங்களுடைய கையை அசைக்க
இயங்கும் தொலைக்காட்சி....................................................12

## முகம் பார்த்து திறக்கும் கதவு

முகத்தை அறிந்து கதவைத் திறக்கும் முறைமை...........13

## உங்களுடைய நாயைத் தொலையவிடாத கைபேசி

புதிய Retrieva நாய் கழுத்துப்பட்டி.................................21

## கணினி வைரஸ் என்றால் என்ன

கணினி வைரஸ் என்பது......................................................28

## Drive களின் காவல்காரன்

Mk Drive Access Control கருவி...................................30

## ரகசியம் காப்பான்

KeyScrambler Professional 2.6.0.2.............................31

## உங்களுக்கென்று ஒரு ரீ.வி கொன்றோல் றூம்

VidBlaster.............................................................................32

## இருபரிமாணத்திலிருந்து முப்பரிமானத்திற்கு

3D Combine 5.3..................................................................33

## திரையைப் படம்பிடிக்கும் தொழில்சார் கருவி

HardCopy Pro 3.2.0...........................................................34

## ஒரு நல்ல முகாமையாளன்

MOVIE Lable.......................................................................31

**Orkin Design rolltop**
உருளக்கூடிய தொடு திரையுடன் கூடிய மடிக் கணினி



15

கைபேசிஊடாக தொலைநகல் அனுப்பலாம்



16

மையில்லாத பிறின்டர்கள்



23

ஒரு கண்டிப்பான பண்பாட்டு வேலி
**Namo CyberFence**



37

| | |
|---|---|
| ஆசிரியர் : | நந்தன் |
| இணை ஆசிரியர் : | நிலாந்தன் |
| தகவல் உதவி : | A. கதிர்காமநாதன்<br>தென்மராட்சி கல்வி வலையம்<br>**ADE (Assistant Director of Education)** |
| ஆலோசனை குழு : | **Microwin Team**<br>நிலாந்தன்<br>க.பாலமுருகேசன்<br>த.சிறிசெல்வம் |
| பக்கவடிவமைப்பு : | **Microwin Multimedia Team** |
| தகவல் தருநர் : | **PC-War CH**<br>**(ASIA, Europe,USA & Canada)** |
| அச்சுப்பதிப்பு : | **Sellam Press** |
| வெளியீடு : | **Microwin Electronics (Pvt LTD)** ற்காக<br>**PC-War CH Switzerland**<br>**Postfach-8,8475 Ossingen CH** |
| விலை : | ரூபா **89/.** |
| மின்னஞ்சல் : | **microwinfile@gmail.com** |
| தொலைபேசி இல. | |
| ஐரோப்பா : | **+41 32 511 411 5** |
| தொலைநகல் : | **+41 32 511 411 5** |
| இலங்கை : | **+94 77 644 18 86** |
| **Skype :** | **pckalam** |




| | |
|---|---|
| Switzerland | +41 32 511 411 5 |
| Srilanka | +94 77 644 18 86 |
| India | +91 91 76 29 52 15 |
| Austria | +43 72 051 75 62 |
| Germany | +49 180 100 3272 7878 |



**Ganini-kalam-magazine is registered trade name, owns and operated by PC-WAR Switzerland**

## நீங்கள் செல்லும் எல்லா இடங்களையும் வழித்தடம் பிடித்து பதிவு செய்யும் கருவி

GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீங்கள் செல்லும் எல்லா இடங்களையும் உண்மைக்கு வழித்தடம் பிடித்து பதிவு செய்யும் சிறிய சாதனம் இதுவாகும். கூகுள் ஏத் போன்ற தொடரறா (on line) உரிய இடத்தைக் கண்டுபிடிக்கும் பிரயோகத்திற்கு (Mapping Application) பதிவு செய்யப்பட்ட தரவுகளை நீங்கள் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

இச் சிறிய சாதனமானது 64 GB உள்ளக நினைவகத்தை கொண்டிருப்பதுடன், பதிவு செய்யப்பட்ட தரவுகளை அவ்வப்போது சேமித்து வைத்துக் கொள்கிறது.



இதிலே ஒரு செக்கன் தொடக்கம் 59 நிமிடம் வரையான காலப்பகுதியிலே, பதிவு செய்து கொள்ளும்படியாக ஏலவே வகுத்தமைத்துக் கொள்ளலாம். சிறிய ளவான இச் சாதனமானது குத்துயரம், வேகம், நேரம் மற்றும் தூரம் உட்பட 260,000 வழிப்புள்ளிகளை வைத்துக் கையாளக்கூடியதாய் உள்ளது.

இச் சாதனம் மிகச் சிறியதாய் உள்ளதால் உங்களின் சட்டைப் பையிலே இலாவகமாக வைத்துக் கொண்டு உலகைச் சுற்றி வருவது இலகுவாக உள்ளது. வின்டோஸ் XP, விஸ்ற்ரா மற்றும் வின்டோ OS களில் இயங்கும் கணனிகளுடன் தரவுப் பதிவேற்றத்திற்காக இச் சாதனத்தை இணைத்துக் கொள்ளலாம். இதிலுள்ள சிறிய ஒரு குறைபாடு என்னவெனில் நீங்கள் இதனை 30 நிமிடங்கள் பாவிப்பதற்காக இரண்டு மணிநேரம் மின்னூட்ட வேண்டியுள்ளதாகும்.

## இரட்டைத்திரைகளையுடைய ரீடர்

### 1 Cross Tech MIDhybrid



இரட்டைத் திரை ஈ வாசகர்கள் ஒற்றைத்திரை ஈ வாசகர்களை விட நன்மை அனுபவிக்கிறார்கள். இரட்டைத் திரைகளுடன் இணைய உலாவுதல், வர்ண LCD திரையில் குறிப்பு எழுதுதல், ஈ ink display யில் வாசித்தல் போ்ன்ற ஒன்றுக்கு மேற்பட்ட சிக்கலான வேலைகளில் ஈடுபடலாம்.

1 Cross Tech MIDhybrid என்பது வலது பக்கத்தில் விசைகளின் பகுதியையும் (Key pad) இடது பக்கத்தில் ஈ ink display யையும் மடித்து புத்தகம் போல ஆக்குவதற்கான பிணைச்சலையும் கொண் டுள்ள இரட்டைத்திரை ஈ வாசிப்பியாகும்.

1 Cross Tech MIDhybrid அதி சக்தியுள்ளதாக உள்ளதுடன் Alex e வாசிப்பி போல Android 1.6 இல் இயங்குவதுடன், LCD யில் ஈ ink display மூலம் வாசகருக்கு திருப்தியளிக்கிறது. 3G, Bluetooth இணைப்பு, முன்னோக்கிய இணையக் கமரா என்பவற்றையும் கொண்டுள்ளது. விலை, வெளியிடப்படும் திகதி போன்ற தரவுகள் இன்னும் இல்லை.


# கொண்டாட்டங்களைச் சுடச்சுட நேரடியாக ஒளிபரப்பும் கைபேசி

செல்லிடப்பேசி உபாயங்கள் ஊடாக நிகழ்வுகளைக் கொண்டுவரும் அலைவரிசைகளை வழங்குவதற்காக பாவனையாளருக்கு அண்மையில் நடக்கும் நிகழ்வுகளை நிகழ்வு அமைவிடம், நிகழ்விடம் முதலிய விபரங்களுடன் இதன் மூலம் நேரடியாகக் கண்டுகழிக்கலாம்.







உங்களுக்கு அண்மையில் நடைபெறும் எந்த நிகழ்வையும் பார்வையிட பாவனையாளர் தம் ஐபோன் போன்ற செல்லிடப்பேசியை பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் நல்ல நிகழ்வுகளைக் கொண்டுவரும் அலைவரிசையை தெரிவு செய்து வைத்துக்கொண்டு எல்லா நிகழ்வுகளையும், நிகழ்ச்சிகளையும் பார்த்துக் கொள்ளலாம்.




இந்த Junaio 2.0 ஒருமென்ரட் றியலிற்றியைப் பயன்படுத்தி நிகழ்வின் திசையில் திருப்பப்பட்ட உங்களது செல்லிடப்பேசியின் கமராவால் பிடிக்கப் பட்ட நேரடிக் காட்சி மீது தகவலை மேலடுக்குச் (Overlay) செய்கிறது. இந்த Junaio ஆனது 3 Gs ஐபோன்களுக்காக தற்போது www.junaio.com இணைய தளத்தில் இருந்து வெப் இன்ரவேஸ்களுக்காக கிடைக்கக் கூடியதாகவுள்ளது. ஆனாலும் Android சிமாட் போன்களுக்கான பதிப்பு இன்னமும் உருவாக்கப்பட்டுக் கொண்டி ருக்கிறது. கொண்டாட்டங்களுக்குச் செல்வோருக்கான சிறந்ததொரு சேவையாக இது உள்ளது.

# மடிக்கணினிக்கும் மொனிற்றருக்கும் இடையே மாய இணைப்பு



## Warpia Easy Dock

மடிக் கணினியையும் மொனிற்றரையும் வயரில்லாமலே இணைக்கிறது

**Warpia Easy Dock** எனப்படும் வயரில்லாமல் உங்களின் நோட் புக், மடிக் கணினி, மக் புக் என்பவற்றை கணினியின் மொனிற்றர், மவுஸ் போன்றவைகளுடன் இணைக்கும் உபாயங்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பது குறித்து R&D அறிவித்துள்ளது.

**Warpia Easy Dock** இல் அனுப்பி /**Transmitter,** பெறுவி / **Receiver** என்பன சோடியாக வருவதுடன், இதன் **Transmitter** ஆனது நோட்புக் மற்றும் மடிக் கணினியில் அடிக்கப்படும் **USB** கட்டையில் இருக்கும், பெறுவி / Receiver மொனிற்றர், மவுஸ், கீபோட்டில் இணைக்கப்பட்டிருக்கும்.

உங்களின் நோட்புக் மற்றும் மடிக் கணினி என்பன **Receiver** பொருத்தப்பட்ட வெளிப்புறக் கருவி களை உடனடியாக உணர்ந்து கொண்டு வயரில்லாமலேயே சமிக் ஞைகளை அனுப்பும். இது 1400 **x 1050** அளவு வரைக்குமான றிசலூஷன் உடைய படங்களையும் மொனிற்றருக்கு அனுப்ப வல்லது.

ஒரு மொனிற்றருடன் அல்லது புறொஜக்டர் உடன் உங்களின் மடிக் கணினியை வயரில்லாமல் இணைத்து விடலாம். இதற்கான சில பிரயோகங்களை **Warpia Easy Dock** கொண்டுள்ளது. நீங்கள் உயர்தரமுடைய ஸ்பீக்கர்களையும் உங்களின் மடிக் கணினியுடன் இவ்வாறு இணைத்து விடலாம். இது விண்டோஸ் 7, விஸ்ற்றா, **XP Mac OS X leopard** மற்றும் **Snow Leoperd** உடன் இயங்குகிறது. இதன் விலை **$ 150** ஆகும்.



## குறைந்த முதலீட்டுடன் சிறிய CD/DVD Duplication தொழிற்சாலை.


உங்களுக்கான ஒரு தன்னியக்க சீடி அல்லது **CD/DVD** தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க முடியும். அதிகப்படியான **Data** களை எந்தப்பிசகும் இல்லாமல் நீங்கள் Blank- CD யில் பதிவு செய்ய முடியும்.

இந்த **CD/DVD Copier** இயந்திரத்தை மிக இலகுவாக **USB-Port** மூலம் உங்கள் கணினியில் இணைத்து இயங்கவைக்லாம் இந்த சிறிய **CD/DVD Duplicater** இனுள் ஏறத்தாள் 100 **CD** கள்வரை நிரவி அவற்றினை தன்னியக்கமாக செயற்பட வைக்கலாம்.

வெற்றிகரமான இந்த **Burning** முறையில் தவறான **CD** களை இனம் கண்டு அந்த பளுதடைந்த **CD** களை தன்னிச்சையாக வெளியேற்றுகிறது.

நாம் வெவ்வேறு வித்தியாசமான **Master CD** களை ஒரே தடவையில் இடும் இடத்து ஒவ்வொன்றிலும் எமக்கு தேவையான பிரதிகளின் எண்ணி க்கையை குறிப்பிடுவோமாயின் இந்த இயந்திரமானது நாம் குறிப்பிட்ட எண்ணிக்கையை ஒவ்வொரு மாஸ்டர் **CD** களிலும் இருந்தும் தன்னிச்சையாக இலகுவாக பிரதிசெய்துவிடும்.

இது புகைப்பிடிப்பாளர், சிறியரக **Multimedia** தொடர்பான வர்த்தக ங்களை மேற்கொள்வோருக்கும், பெரு மளவிலான **Data** களை பதிவுசெய்ய உகந்ததாகும்.




இதில் **Light on** மூலமான உயர்ரக **CD Burning** முறை வேகம் **48xCD** அல்லது **20X DVD**
**Support Meida: DVD-R/DVD-R DL/DVD-RW/DVD+R/DVD+R DL/DVD+RW/DVD-RAM/DVD-ROM/CD-R/CD-RW/CD-ROM**
இதன் முக்கிய தொழிற்பாடாக தன்னிச்சையான Data Backup மற்றும் **Recovery** அமைகிறது.

## மெலிது மெலிது நோட்புக் மெலிது

மிக மெலிதான சட்டகமற்ற **(frameless)** குறிப்பு புத்தகத்தை வெளியிடும் Acer

Acer வெளியிடும் மிக மெலிதான குறிப்பு புத்தகமானது தன்னிகரற்ற அம்சமாக சட்டகத்தைக் கொண்டிராதிருப்பதுடன், பின்வார்ப்பையும் கொண்டுள்ளது. இது தொடுதிரையைக் கொண்டிருப்பதுடன், பனலின் பின்பக்கம் கண்ணாடி படை ஒன்று மூடியாகவும் பயன்படுகிறது.

Acer Corningன் அதி பலப்படுத்தப்பட்ட கண்ணாடிப்படையை பயன்படுத்தவும் இப்படையை சட்டகமற்ற வடிவமைப்பின் மூடி போன்று தொழிற்படுத்துவதற்காக பிற்பகுதியில் வர்ணம் அச்சடிக்கப்படும் முறையை Acer கைக்கொள்வதாக சொல்லப்படுகிறது.



இது நோட் புக்கின் கனதியை சிறிது குறைத்து விடுவதுடன், கூடுமானளவு கனதியைக் குறைத்து உற்பத்திச் செலவையும் குறைக்கின்றது.

சந்தையிலே இதுவே இவ் வகையினுள் முதலாவதாக உள்ளது. இவ்வாண்டின் இரண்டாவது பாதியில் இச் சட்டகமற்ற நோட்புக்குகளை Acer உண்மையாக்கி விடும்.

# உலாப்போங்கள் உங்களுடைய எடை குறையும் உங்களுடைய செல்பேசிக்கும் மின்னேறும்

செல்லிடப்பேசிகளுக்கான Piezoelectric kinetic energy harvester இற்கான தன்னுரிமத்தினை கடந்த மாதத்திலே நொக்கியா கேட்டிருந்தது.

இத் தொழில்நுட்பமானது செல்லிடப் பேசிகள் தாமாகவே தமக்கு மின்னூட்டிக் கொள்ள உதவுகிறது.




உண்மையிலே இச் செல்லிடத் தொலைபேசிகள் kinetic energy உருவாக்கி தமக்குத்தாமே மின்னூட்டிக் கொள்ள அவை அசையவேண்டியனவாக உள்ளன. அல்லது அவைகளை மின்னூட்டிக் கொள்வதற்காக மின்சா ரத்தை உருவாக்க அசைவுகள் வழியாக அதன் சில கிறிஸ்ரல்கள் அமுக்கப்பட வேண்டியனவாக உள்ளன. நீங்கள் எப்போதும் உலாவுபவராக இருந்தால் தானாக மின்னூட்டும் செல்லிடப்பேசி என்பது உங்களுக்கு இலாவகமான ஒன்றுதான்.

ஏனெனில் உங்களின் நாளாந்த அசைவுகள் உங்களின் செல்லிடப்பேசி முழுமையான மின்னூட்டலில் இருப்பதை அது உறுதிப்படுத்திக் கொள்ளும்.


ஆனால் கணினிக்கு முன்னே இருப்பவர்கள் ஒன்று இரண்டு அடியே நகராதவர்கள் தங்களது செல்லிடப்பேசிகளுக்கு மின்னூட்டிக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வார்கள். நீங்கள் இந்த தொகுதியுள் வருவீர்களாய் இருந்தால், நீங்கள் உங்களது செல்லிடப்பேசியை செல்லப்பிராணியிலே கட்டிவிடும் ஒரு குறும்பை செய்ய வேண்டியிருக்கும். உங்களுக்காக அது சுழன்று திரிந்து செல்லிடப்பேசியை மின்னூட்டிக் கொள்ளும்.

## Windows 7 Phone

Smart Phone ற்கும் Mobile Phone ற்குமான Microsoft ன் புதிய வெளியீடு Windows 7 Phone

இந்த Operating System ஆனது நேரடியாக internet ஊடாக இணைக்கப்படுகிறது இது பாவனையாளருக்கு மிகவும் இலகுவாக அமைகிறது.

இந்த Operating system த்தினை நீங்கள் பெறவேண்டுமாயின் கட்டணத்தை செலுத்தி Microsoft ன் Licence இனைப் பெறவேண்டும். ஆனால் இதைப்போன்று அல்லாமல் Google ன் Android Operating system த்தினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.
இதில் உள்ள XBOX Life platform மற்றும் Video க்கள் smart Phone ற்கும் பாவிக்கக்கூடியதாகவுள்ளது.




# செல்லிடப்பேசியின் சார்ஜ் இறங்கி விட்டதா? இருக்கவே இருக்கிறது ட்றிபிள் A பற்றரி

## AAA பற்றிகள் மூலம் மின்னூட்டக்கூடிய Olive FvrOn செல்லிடத்தொலைபேசி

**எத்தனை தடவைகள் நீங்கள் வெளியே சென்றிருக்கிறீர்கள், எத்தனை தடவை உங்களது தொலைபேசி செயலற்றுப்போயுள்ளது, உங்களுடைய செல்லிடத் தொலைபேசியானது AAA பற்றிகளால் மின்னூட்டப்படுமிடத்து இது ஒரு இலகுவான விடயமாகிவிடும். ஏனெனில் நீங்கள் AAA பற்றிகளை உங்களுக்குக் கிட்டிய எந்த கடையிலிருந்தும் சுலபமாகப் பெற்றுக்கொண்டு உங்களுடைய அழைப்புக்களைத் தொடர்ந்து கொண்டிருக்கலாம்.**

இந்த Olive FvrOn என்பது ஒரு இரட்டை வழியாக மின்னூட்டக்கூடிய செல்லிடத் தொலைபேசியாகும். ஏனெனில் இது **AAA** பற்றிகள் மூலமாக மின்னூட்டப் படக்கூடிய ஒரு மாற்று மின்னூட்டல் மூலத்தைக் கொண்டுள்ளது.









இது ஒரு நியம முறையான மீள மின்னூட்டக்கூடிய பற்றியுடனேயே வருகின்றது. ஆகவே எப்பொழுதெல்லாம் இவ் ஒலிவ் செல்லிடத் தொலைபேசி மின்னூட்டல் அற்றுப் போகின்றதோ, அல்லது நீங்கள் மின்னூட்டியை எடுத்துச் செல்லாமல் இருக்கிறீர்களோ,

அவ்வேளையில் எல்லாம் நீங்கள் அண்மையிலுள்ள கடைக்குச் சென்று **AAA** பற்றிகளைப் பெற்று அதற்கு மின்னூட்டி விடலாம். இந்த Olive FvrOn செல்லிடத் தொலைபேசியானது ஒரு எளிய இலகுவான 1.5 அங்குல கலர் காட்சிப் பகுதியைக் கொண்ட, **FM** ஸ்ரிறியோ உள்ளடங்கிய, ஸ்ரிறியோ கேட்கும் கருவிகளையும் உள்ளடக்கிய சாதனமாகும். ஆனால் இது அவசரகாலத்தின்பொழுது ஒரு உயிர் காப்பியாக உள்ளது. துரதிஷ்டவசமாக இந்தியாவில் இது இப்பொழுதுதான் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. ஏனைய நாடுகளில் இது கிடைக்கக்கூடியதாக இருப்பதைப் பற்றி எந்தத் தகவலும் இதுவரை இல்லை.

# ரகசியமாய்க் கதைக்கலாம் வாங்கோ

## செல்லிடத் தொலைபேசிகளில் வாயசைவுத் தொழில்நுட்பம் சத்தம் இன்றியும் பாதுகாப்பாகவும் தொடர்பு கொள்ள உதவுகிறது



நீங்கள் உங்களின் அன்புக்குரியவருடனோ அல்லது உங்களின் வியாபாரப் பங்காளருடனோ மேற்கொள்ளும் தனிப்பட்ட செல்லிடத் தொலைபேசி உரையாடலை பக்கத்திலுள்ள வேறு யாராது கேட்டு விடுவார்களோ என்ற கவலை உங்களுக்கு இருக்கலாம். ஆகவே சிலவேளைகளில் உங்கள் தொலைபேசியின் பேசுபகுதிக்குள் முணுமுணுத்துக் கொள்ளுவீர்கள். அதன் மூலம் யாரும் உங்கள் பேச்சை கேட்டு விடவில்லையென்றும் நம்பிக்கொள்ளுவீர்கள்.

வாயசைவை வாசிக்கும் தொழில்நுட்பத்தின் மூலம் மிக விரைவில் செல்லிடத் தொலைபேசிகளானவை உங்களுடைய வாயசைவினை அறிந்து கொண்டு உங்களுடைய முணுமுணுப்பைக் கூட அறிந்து கொண்டு தொலைபேசி அழைப்பின் மற்றைய அந்தத்தில் உள்ள ஆளுக்கு நீங்கள் சொல்ல விரும்புவதை தெரிய வைத்துக் கொள்ளும்.

இவ் வாயசைவை உய்த்துணரும் தொழில்நுட்பமானது **Karlsruhe Insititute Technology (KIT)** நிறுவனத்தினால் எலக்ரோனிய கிரபிக்கை அடிப்படையாக வைத்து வாயசைவுகளால் பயனாளர்கள் தொடர்புகொள்ளக்கூடிய, பேச்சை ஒத்த சத்தத்தை உண்டாக்காத வாயசைவுகளால் மாத்திரமே, பயனாளர்கள் தொடர்புகொள்ளக்கூடிய முறையை வழங்குகின்றது.

உங்களது உதடுகளின் அசைவுகள் சரியாக இனம் காணப்பட்டு, அழைப்பின் அடுத்த அந்தத்தில் உள்ள ஆளுக்கு மாற்றிக் கொடுக்கப்படுகின்றது. கடவுச் சொற்கள் அல்லது தனிப்பட்ட அடையாளம் காணுகை இலக்கங்கள் என்பவற்றை மற்றைய அந்தத்திலுள்ளவருடன் இரகசியமாகத் தகவல் கொடுக்க வேண்டிய நேரங்களில் சத்தமில்லாமல் தொடர்புகொள்ளக்கூடிய ஒரு வழிவகைக்கு உதாரணமாக இருக்கின்றது. இது ஏனையோர்களால் ஒட்டுக் கேட்டுக்கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கான ஒரு சிறந்த வழியாகவும் உள்ளது.

# மேலும் மெருகூட்டப்பட்ட மொழிபெயர்ப்பு மென்பொருள்.

PROMT 9.0 ஆனது Internet Explorer Version 8.0,Firefox 3.5,Skype,Windows Messenger, மற்றும் QIP என்பவற்றில் மொழிமாற்றம் செய்யப்படுவது அறிந்தவிடயமே.





இந்த புதிய வெளியீட்டின் புதியவிடயம் என்னவென்றால் இது ஒரு தடவையில் அதிகப்படியான PDF File களை மொழிமாற்றம் செய்யக்கூடியதுதான்.MS Office, Open Office Writer மற்றும் Acrobat ற்கான Programm கள் இணைக்கப்பட்டுள்ளது. எழுத்து இலக்கணங்களை திருத்துவதற்காக பிரபல்ய அகராதியான Duden ம் இதில் இணைக்கப்பட்டுள்ளது.

இது வீட்டுப்பாவனைக்கு சிறந்ததாகவே கருதப்படுகிறது. தொழில் சம்பந்தமாக மொழிமாற்றம் செய்பவர்களுக்கு Französisch - Deutsch-, Spanisch - Deutsch மற்றும் Russisch போன்ற மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யக் கூடியதாகவுள்ளது.

# காவிச்செல்லக்கூடியதும், பிரதி எடுக்கக்கூடியதுமான ஒரு காட் டிறைவ்

**Aleratec PortaCruiser** ஒரு எடுத்துச் செல்லக்கூடிய பிரதி செய்யக்கூடிய காட் டிறைவ்




நீங்கள் ஒரு நடமாடும் கணினி தொழில்நுட்பவியலாளராக இருந்து கொண்டு நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்வதற்கு பாரம் குறைந்ததான ஒரு பிரதி செய்யும் காட் டிறைவ் வைத்திருக்க விரும்புவீர்கள்.

நீங்கள் இலகுவாக பாதுகாப்பு எடுக்கக்கூடியது அல்லது பிரதி செய்யக்கூடியது உங்களுடைய வாடிக்கையாளருக்காக பாதுகாப்பு பிரதிகளை எடுக்கக்கூடியது அவர்களுடைய காட் டிறைவ் சேதமாகும் போது இலகுவாக செய்யக்கூடியது, போன்ற தேவைகளுக்காகத் தான்

இதோ வருகிறது **Aleratec 1:1 HDD PortaCruiser.** பாரம் குறைந்ததாகவும், எடுத்துச் செல்லக்கூடியதாகவும் உள்ளதுடன், நீங்கள் போகுமிடம் எல்லாம் பிரதி செய்வதற்காக எடுத்துச் செல்லக்கூடியதாகவும் **2.5 – 3.5** அங்குல அளவிலான காட் டிறைவ் ஆகவும் உள்ளது.

இவ் **Aleratec PortaCruiser** ஆனது **Dual Disk RAID** கட்டுப்படுத்தியைப் போன்று அதன் இருமடங்காக இருப்பதுடன் இன்னும் இரண்டு காட் டிறைவ்களை **USB 2.0 PORT** னூடாக உங்களுடைய கணினியில் செலுத்தி நடமாடும் போது பயன்படுத்தும் வெளிப்புற நினைவகமாக பயன்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

அத்துடன் இந்த **PortaCruiser** ஆனது இருவழிகளையுடைய **LCD** களைக் கொண்டுள்ளது. இவைகள் உங்களுடைய நினைவகத்தின் பிரதிசெய்தல் நிலைமையைக் காட்டிக் கொண்டு இருக்கின்றது.

8 அவுன்ஸ்கள் அல்லது 222 கிராம்கள் நிறையுடைய இச் சாதனமானது உங்களுடைய கருவிப் பையில் காவிச் செல்வதற்கு பாரமானதாக இல்லாதிருப்பதுடன், ஏனைய வாடிக்கையாளரிடமிருந்து நீங்கள் அழைப்புகளைப் பெறும்போது உங்களுடைய தரவுப் பாதுகாப்புச் சேவைகளை தயாராக வைத்திருப்பதற்கும் உதவுகின்றது. இது வின்டோஸ் **OS** களுடனும் வின்டோஸ் **XP** விஸ்ற்றா வின்டோஸ் 7 மற்றும் லினக்ஸ் **MAC** 10.3 அல்லது அதற்கு பிற்பட்டவைகளுடனும் ஒத்து இயங்கக் கூடியதாக உள்ளது.



# கேளுங்கள் வாசிக்கப்படும்.

**Intel வாசிப்பி வாசகத்தைப் பேச்சாக்கும் கருவி அச்சடித்த வாசகங்களை வாசிப்பதற்கு சோம்பல்படுவோர் Intel வாசிப்பியைப் பயன்படுத்தி அதனைக் கொண்டு உங்களுக்காக அவைகளை வாசிப்பிக்கலாம். இப் புதிய சாதனமானது Intel நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

Intel எளிமையாக இதற்கு ஏனைய உயர் தொழில்நுட்ப பெயர்களைப் பாவியாது **வாசிப்பவர்** என்றே பெயரிட்டுள்ளது. Intel வாசிப்பு உபகரணமானது தன்னியக்கமாக அச்சடித்த எழுத்துக்களை எண்ம முறை வடிவத்திற்கு தன்னியக்கமாகமொழிபெயர்க்கக்கூடிய சக்திவாய்ந்த கமராவினைக் கொண்டுள்ளதுடன் இந்த மாற்றப்பட்ட எண்ம வடிவங்கள் திரையில் பார்க்கப்படவோ அல்லது உரத்து வாசிக்கப்படகூடியதாகவோ இருக்கும். இவ் உபகரணமானது சுவடிக்கூட அச்சடித்த வாசகங்களில் பயன்பாடுடையதாக இருப்பதுடன், பிரெயிலின் பாவனையின்றியே பார்வையற்றவர்களுக்கும் பார்வைக் குறைபாடு உடையவர்களும் பயன்படுத்த உதவியானதாகவும் இருக்கும்.



இந்த முறைமையானது வாசகத்தை இடம் கண்டு பிடித்து வாசிப்பதற்கான காட்சிப்பகுதியைக் கொண்டிருப்பதுடன், இது **Intel Atom**யினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

இது **DAISY** வடிவமைப்புடைய புத்தகங்க ளையும் **MP3** மற்றும் **WAV** கோப்புக்களையும், வாசிப்பவராலேயே உருவாக்கப் படாதவைகளையும் வாசிக்கக்கூடியதாக இருக்கும்.




முழுமையானதும் சிறியளவிலானதுமான USB-Port களிற்கூடாக கணினிகளுக்கு இலகுவாக மாற்றி அனுப்புவதற்கான உபகரணங்களை இது கொண்டிருக்கும். அச்சடித்த வாசக ங்களை பேச்சிற்கு மாற்றும் இவ் **Intel** உபகரணமானது அடுத்த சில வாரங்களில் சில்லறைக் கடைகளில் கிடைக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் விலை ஒன்று **$ 1500** ஆகவும் இருக்கும்.

# நோய்க்கிருமிகளுக்கு ஒரு புதிய எதிரி நோய்க்கிருமிகளை மோப்பம் பிடிக்கும் கைபேசி



நோயின்றி இருப்பதில் அக்கறை உடையவர்கள் தம்முடைய செல்லிடத் தொலைபேசிகளை ஒரு நுணுக்குக் காட்டியாகவும் இரட்டைச் செயற்பாட்டுடன் பயன்படுத்தி செல்லுமிடங்களில் தம்மைச் சூழ உள்ள கிருமிகள், நுண்ணுயிர்களை மணந்து பிடிக்கும் இந்த எண்ணத்தை விரும்புவார்கள்.

கலிபோனியா பல்கலைக்கழக மின்னியல் பொறியியல் உதவிப் பேராசிரியர் **Nano Systems Insititute** ஐச் சேர்ந்த **Aydogan Ozcan** என்பவர் நீங்கள் சென்று கொண்டிருக்கும்போது நோய்களைத் தடைசெய்வதற்கு உதவும் செல்லிட நுணுக்குக் காட்டியை வடிவமைத்துள்ளார்.

இந்த உதவிப் பேராசிரியர் வெறுமனே 10 டொலர்களை இதனுடைய பகுதிகளுக்கு செலவழித்திருப்பதுடன் ஒரு நுணுக்குக்காட்டி போன்று பெருப்பித்திக் காட்டுவதற்காக அவர் ஒரு மென்பொருளையும் எழுதியுள்ளார். அதிலே எந்த வில்லைகளோ அல்லது இயந்திரனியல் ஸ்கானிங்களோ சம்பந்தப்படவில்லை.

பெரிதுபடுத்திக் காட்டுவதானது இந்த மென் பொருளிலும் LEDs, Holograms மற்றும் இலத்திரனியயலிலுமேயே தங்கியுள்ளது. இந்த நுணுக்குக்காட்டியை செல்லிடத் தொலைபேசியில் ஒன்றிணைக்கும் இந்த முறைமையானது செலவில் குறைந்ததாக இருப்பதுடன், அதனால் அதன் எடுத்துச் செல்லக்கூடிய திறனையும் அது இழந்து விடவில்லை. இது பயன்படுத்த இலகுவாக உள்ளதுடன் சம்பிரதாய நுணுக்குக்காட்டியை விட திறம்பட நோயை இனம் அல்லது காண ஆய்வு செய்ய மற்றும் இந்த முறையை அடியொற்றி எதிர்காலத்தில் முயற்சிப்பதற்கும் உதவுகிறது.



செல்லிடத் தொலைபேசியானது சென்று கொண்டிருக்கும்போதே நுணுக்குக் காட்டியாக நோய்களை இனம் காணுதல்

## கைபேசிகளுக்கான Google Speech-to-speech translator

Google நிறுவனமானது கைபேசிகளுக்கான **speech-to-speech translation** மென்பொருளை உருவாக்கியுள்ளது. இந்த மென்பொருளை உங்கள் கைபேசியில் நிறுவிப்பயன்படுத்தும் பொழுது எந்தவித மொழிப்பிரச்சனையுமின்றி உங்கள் வெளிநாட்டு நண்பரிடமும் வணிக தொடர்பாளர்களிடமும் கலந்துரையாட முடியும்.

இந்த **Google Trnslator** மூலம் மற்ற மொழி பேசுபவர்களிடம் தொடர்புகொள்ளும் பொழுது எந்த ஒரு மொழிபெயர்ப்பு அகராதியும் தேவைப்படாது என சொல்லப்படுகிறது.



இந்த **Google Speech Translator** ஆனது ஒலி உணர்வு தொழில் நுட்பம் மூலம் வேலை செய்கிறது. எதுவாயினும் வித்தியாசமான ஒலி வேறுபாடு, சொற்கள் வேகம் ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து வெளியீடுகளை தர இயலவில்லை.

இதற்காக Google நிறுவனமானது இன்னும் சில வருடம் வேலை செய்ய வேண்டியிருக்கும். எதுவாயினும் விரைவில் நம் கைபேசியில் **GOOGLE TRANSALATOR** தொழில்நுட்பத்தின் மூலம் வெளிநாட்டவருடன் எளிதில் கலந்துரையாடலாம்.

# Samsung DMB SCH- w920 மெல்லியது ஆனால் விஷயமுள்ளது

Samsung ஆனது ஒரு புதிய **DMB** போனை வெளியிட்டுள்ளது **SCH-w920** இது மிகவும் மெல்லியதாகவும், தள்ளி இழுப்பதுமான அமைப்பில் உள்ளதுடன், 12.9 **mm** தடிப்பத்திலே நிறைய அம்சங்களை உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

இதனுடைய விலாசப் புத்தகமானது **(AddressBook)** 3,000 தொடர்புகளைச் சேமிக்க அனுமதிக் கின்றது. மெய்யெழுத்துக் களையும், குரலையும், நேரடி விசைகளையும் பயன்படுத்தி தொடர்புகளை தேடி எடுக்கவும் இது ஆதரவு அழிக்கின்றது.

வீடியோ அழைப்புக்கள், மீடியா பிளேயர், புளூருத் மற்றும் சுவார சியமான மொழிகற்றல் தொழிற் பாடுகள் முழு அளவிலான ஆங்கில அகராதி TOEIC மற்றும் TOEFL பரீட்சைகளுக்குத் தயார்படுத்தக்கூடிய வசதிகள் என்பவற்றையெல்லாம் இது கொண்டுள்ளது.




இந்த செல்லிடத் தொலைபேசியானது பல செய்மதி அலைவரிசைகளில் செய்மதித் திரைப்படங்களைப் பார்க்கக்கூடியவாறாக **DMB** சமிக்ஞைகளைத் தெரிந்தெடுப்பதற்கு அனுமதிக்கின்றது. இந்த செல்லிடத் தொலைபேசியில் உள்ள உணர்கொம்பானது **DMB** செய்மதி சமிக்ஞைகளைத் தெளிவாகப் பெற உதவுகின்றது. இத் தொலைபேசியானது கறுப்பு வெள்ளை நிறத்தில் 500,000 கொரியன் வொன்னிற்கோ அல்லது 425 அமெரிக்க டொலருக்கோ கிடைக்கக்கூடியதாக இருக்கும்.




# CorelDRAW Graphics Suite X5

Graphics Software ஆன Coreldraw ஆனது தனது 15 வது **Version** இனை வெளியிட்டுள்ளது. அச்சகத்துறை உட்பட பல முக்கியதுறைகளில் மிகவும் விரும்பத்தக்க **Graphics Images,Fonts** மற்றும் **Template** கள் இதிலுள்ளன. **Color** இனை தெரிவுசெய்ய புதிய **Color Management** ம் உள்ளது. இது முதன்முறையாக 1000 ற்கும் மேலான **Fonts** இனைக்கொண்டு வெளிவந்துள்ளது.



**CorelDRAW Graphics Suite X5** னால் கற்பனை வடிவம் மேலும் வளர்கிறது. இதன் வேகம் **Color control ,vector illustration tools,** என்பன அதிகரித்துள்ளன.

எந்த வடிவமைப்பாளருக்கும் இது மிகவும் அவசியமானது. அதுமட்டுமல்லாமல் இதன் **Graphics Fonts** மற்றும் **Image** போன்றவை computer ல் அதிவேமாக செயற்படக்கூடியவை இந்த **CorelDRAW** ன் புதிய வெளியீடான **CorelDRAW Graphics Suite X5** னால் உங்கள் கற்பனை வளத்தை மேலும் மெருகூட்ட முடியும்


இதில் முதலாவது புதிய **Multicore Support** உடன் அதிக வேகம், அதிகப்படியான உள்ளடக்கத்துடன் மேலும் மெருகூட்டப்பட்ட **professional templates**, இலகுவாக கற்றுக்கொள்ள அதிகளவில் **Tools** உடன், **Video** மூலமான **tips** உடன் கூடிய கற்கைநெறி, 100 மேற்பட்ட **File Format** களுக்கு **support** செய்கிறது.


Flash Animation Support உடன்கூடிய இணைய பக்கங்களை உருவாக்க இலகுவான தொழிற்பாடுகள் போன்றவை உட்பட மேலும் பல புதிய வடிவமைப்புடன் இந்த **CorelDRAW Graphics Suite X5** வெளிவந்துள்ளது.

# நீங்களும் மந்திரவாதியாகலாம்


## உங்களுடைய கையை அசைக்க இயங்கும் தொலைக்காட்சி

றிமோட் கொன்றோலுக்குப்பதிலாக கையை அசைத்தால் போதும்,தொலைக்காட்சியை இயக்கி விடலாம். **Hitachi** நிறுவனத்துடன் சேர்ந்தியங்கும் Canesta மற்றும் GestureTek எனும் கொம்பனிகள் பயனாளியின் கை அசைவுகளை உணர்ந்து கொள்ளும் புதிய வகை தொலைக்காட்சிகளை அமைப்பதில் ஈடுபட்டுள்ளன.




கை அசைவுகள் மூலம் தொலைக்காட்சிகளைக் கட்டுப்படுத்துவது என்பது றிமோட் கட்டுப்படுத்திகளின் பாவனையை இல்லாது ஒழித்துவிடும். கைகளை அசைப்பதன் மூலமே தங்களது தொலைக்காட்சிகளை இயக்கிக்கொள்வது பாவனையாளருக்கு மிகவும் இலகுவாக உள்ளது




குடும்ப உறுப்பினர்களிடையே றிமோட் கொன்றோலுக்காகச் சண்டை செய்வதோ அல்லது அதை இடம்மாற்றி வைத்து விட்டு தேடி அலைவதோ இருக்காது.

Hitachi யுடன் செயற்படும் குறிப்பிட்ட இரண்டு கம்பனிகளும் கை அசைவுக் கட்டுப்பாட்டு தொலைக்காட்சிகளை யதார்த்தமாக்குவதில் தம் முயற்சிகளை முன்கொண்டு வந்துள்ளன.

**GestureTek** என்பது அடிப்படையில் கை அசைவுகள் மற்றும் எந்தக் கை அசைவு தொலைக்காட்சியின் எந்தக் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் என்பதை உணர்ந்து கொள்வதற்கான, மென்பொருளில் கவனம் செலுத்துகிறது.

**Canesta** ஆனது பார்த்துக் கொண்டிருப்பவரின் கையின் முப்பரிமாண விம்பத்தை பிடிப்பதற்கான வன்பொருளுக்குப் பொறுப்பாக உள்ளது. அப்பொழுது தான் முறைமையானது உங்களுடைய கையுக்கும் படத்திற்குமிடையில் வேறுபாட்டைக் காணும்.


Hitachi யின் அங்க அசைவுக் கட்டுப்பாட்டுத் தொலைக்காட்சி ஒவ்வொரு பாவனையாளர்களும் தங்களின் சொந்த விதமான கைக்கட்டளைகளை அதிலே சேமித்து வைத்துக்கொள்வதற்கு அனுமதியளிக்கின்றது. அலைவரிசைகளை **ON** செய்து கொள்வதற்கும் அல்லது உங்களுக்கு விருப்பமான சனல்களுக்கு மாறிக் கொள்வதற்கும் எளிய கை அசைவுகளை வகுத்தமைத்துக் கொள்வது பயனாளர்களுக்கு எப்பொழுதும் புத்தி சாதுரியமானதாக இருக்கும். ஏனெனில் மற்றவர்கள் செய்வதற்கு முன்பாகவே நீங்கள் அதனை செய்து விடலாம்.

# முகம் பார்த்து திறக்கும் கதவு அலிபாபாவாலும் நுழைய முடியாது

## முகத்தை அறிந்து கதவைத் திறக்கும் முறைமை

**Biometric** பாதுகாப்பு உட்புக அனுமதித்தல் முறைமை என்பது கைரேகைகளுடனும் அதனை ஸ்கான்பண்ணி வைத்திருப்போருடனும் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

ஆனால் தற்போதைய இறுதியான தொழில்நுட்பமானது முழு முகத்தையும் ஸ்கான் பண்ணிக் கொள்கின்றது. இது மிகவும் பாதுகாப்பாக உள்ளதுடன், யாரும் உங்களுடைய முகத்தை இலகுவில் பிரதி செய்து கொள்ள முடியாதவாறும் உள்ளது. இங்கேதான் முக **ID** என்ற ஒரு முகம் இனம் கண்டு உள்விட அனுமதிக்கும் முறைமை வருகின்றது. அது உங்களுடைய முகத்தைப் பாவித்து கதவைத் திறக்க உதவுகிறது.



இந்த முக **ID** 500 முகங்களை தனது தரவுத்தளத்திலே பதிந்து வைக்கக் கூடியது. ஒரு சோடி கமராக்கள் இருக்கும். இவைகள் உங்களுடைய முகத்தின் முப்பரிமாணத்தைப் பிடித்துக் கொள்வதுடன், பின்பு தரவுத்தளத்தில் உள்ள முகங்களுடன் அவைகளை ஒப்பிட்டுப் பார்த்து கண்டுபிடிப்பதற்கான கணிதத்தைப் பயன்படுத்தும்.




இப் முப்பரிமாண உருவ இனம் காண்கை முறைமையானது யாரும் முறைமையை ஏமாற்றுவதற்கு போட்டோக்களை இலகுவாகப் பயன்படுத்துவதை சிரமமாக்குகின்றது. மங்கலான வெளிச்சம் குறைந்த நிலைமைகளிலும் இது இயங்கக்கூடியதாக இருப்பதனால், வீட்டுக்கு பிந்தி வருபவர்களுக்கு இது எந்தப் பிரச்சனையாகவும் இருக்க முடியாது. இம் முறைமை தற்போது கிடைக்கக்கூடியதாக உள்ளதுடன் **China Vision** இடமிருந்து இதனைக் கொள்வனவு செய்து கொள்ளலாம். ஆனால் இதன் விலை 447 அமெரிக்க டொலர்களாகும். இதன் விலை காரணமாக பலர் இதனை வாங்காது தள்ளி வைக்கலாம். இது அலுவலகங்களுக்குப் பொருத்தமாக இருப்பதுடன் தற்போதுள்ள காட் முறைமையை மாற்றியமைப்பதுடன், நேரப்பதிவு வேலைகளிலும் கவனம் எடுக்கக்கூடியதாகவும் உள்ளது.

முக **ID** ஆனது இலத்திரனியல் கதவுப் பூட்டுடன் வரும் ஒன்றல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவும். ஆகவே இதனை நீங்கள் சோடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது உங்கள் வீட்டைப் பாதுகாப்பதற்கும் மிகவும் நம்பத்தகுந்ததாக உள்ளதுடன் இதில் தவறு ஏற்படுவதற்கான சதவீதம் **0.0001%** என உரிமை கோரப்படுகின்றது. இவ் மிகச் சொற்பளவிலான தவறானது உங்களைப் போன்ற உங்களுடைய இரட்டைச் சகோதரனால் மாத்திரமே ஏற்படுத்தக்கூடியதாகும்.


# USB AV to computer adapter

தற்பொழுது USB AV to computer adapter வந்துள்ளது. இது video playerகள் மற்றும் பல ஒளி ஆதாரங்களில் இருந்து உங்கள் HARD DRIVE ல் ஒளி தகவல்களை நேரிடையாக பதிவு செய்கிறது, இந்த **USB AV to computer adapter** ஆனது **A/V** அல்லது **S-Video** இணைப்புகளை பெற்றுள்ளது இதன் மற்ற முனையில் **USB** இணைப்பை பெற்றுள்ளது.இதன் மூலம் கணினியில் **USB Port** உடன் இணைத்து **AV** ஆதாரங்களில் இருந்து எடுக்கபட்ட ஒளிதகவல்களை கணினியில் பதிவுசெய்ய முடியும். இந்த சிறிய கருவி மூலம் **VHS tape** தகவல்களை எண்ணியல் வடிவத்திற்கு மாற்றுகிறது.மேலும் மாற்றப்பட்ட ஒளி வெளியீடுகளை கணினியின் **HARD DRIVE** ல் பதிவுசெய்கிறது.மேலும் தொடரிசை வடிவிலுள்ள ஒளிதகவல்களை **DVD, SVCD, VCD, MP4, AVI, PSP, MOV** மற்றும் **DIVX** -format ல் எண்ணியல் வடிவமாக மாற்றி பதிவுசெய்கிறது.




# வயரற்ற USB டிஜிற்றல் நுணுக்குக்காட்டி

வயர் இன்மையானது பாவனையாளர்களுக்கு பெரும் நன்மையைக் கொண்டு வருகின்றது. வயர்கள் மூலம் பாவனையாளர்களை அவர்களின் பயன்பாட்டு திறனை கட்டுப்படுத்தி கட்டி வைக்க மாட்டார்கள். ஊரைச் சுற்றி அலுவலகத்திலும் வீட்டிலும் ஏதாவது நுண்ணுயிர்கள் வாழ்கின்றதா என்பதை அவதானிப்பதற்கு மிகவும் இலாவகமான சிறியளவிலான வயரற்ற **USB** டிஜிற்றல் நுணுக்குக் காட்டி இதோ வருகின்றது. இது **2.4 GHz** வயரற்ற அலைவரிசை மூலமாக பிடித்த படங்களை மீண்டும் வயரற்ற நுணுக்குக்காட்டிக்கு அனுப்புகின்றது.






இவ் வயரற்ற அனுப்புகைக்காக நான்கு விதமான அலைவரிசைகளிலிருந்து நீங்கள் ஒன்றைத் தெரிவு செய்து கொள்வதற்கான எளிய சுவிச்சுகளை இந்தப் பெறுவி **receiver** கொண்டுள்ளது. இந்த நுணுக்குக் காட்டியானது உருக்களை 10 இலிருந்து 200 மடங்காக உருப்பெருக்கம் செய்யவல்லதாக உள்ளதுடன், மிகவும் ஒளித்திறன் சக்திவாய்ந்த வெள்ளை **LED** வில்லைகளையும் கொண்டுள்ளது. நீங்கள் இந்த நுணுக்குக் காட்டியை அதற்குரிய நிலை நிறுத்தியிலிருந்து 2 மீற்றர் தொலைவில் வைத்திருக்கும் அதேவேளையில், அந்த நிலைநிறுத்தியானது கணினியின் USB-PORTலே இணைக்கப்பட்டிருக்கும்.



இந்த வயரற்ற நுணுக்குக் காட்டியிலே **Li-ion** மின்கலம் உள்ளிணைக்கப்பட்டுள்ளதுடன், நிலை நிறுத்திக்கு **Scope back** அனுப்புவதன் மூலம் அதனை மீள மின்னூட்டிக் கொள்ளலாம். இந்த வயரற்ற நுணுக்குக்காட்டியானது மிக உயர்ந்த விலையில் அதாவது 140 அமெரிக்க டொலர்களில் உங்களுக்குக் கிடைக்கிறது.

# பாயைப்போல சுருட்டி விரிக்கக்கூடிய திரை கொண்ட மடிக்கணினி

## Orkin Design rolltop உருளக்கூடிய தொடு திரையுடன் கூடிய மடிக் கணினி



எதிர்காலக் கணினிகள் ஆனவை உத்தேச **Orkin rolltop** வடிவத்திலேயே வரவேண்டும். அதனுடைய திரையை பெரிய அளவுக்கு உருட்டி விடக்கூடிய கருத்து நிலை கணினிகளாக வரவேண்டும். அல்லது வழமையான புதினப்பத்திரிகை போன்று பயன்படுத்தாத நேரத்தில் உருட்டி வைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த **rolltop** ஆனது நெகிழக்கூடிய **OLED** தொடு திரையைக் காட்சியுடனே வருகிறது.

இது முழுமையாக நிமிர்த்தி விடப்படும்போது 13 அங்குல மடிக் கணினி அளவிலோ அல்லது சிறுபத்திரிகை அளவிலோ அல்லது 17 அங்குல கணினிக் காட்சி அளவிலோ வந்து விடுகிறது. இந்த உபாயத்திலே ஒரு இழுத்துவிடக்கூடிய மின்பொருத்தி, ஒரு **Stylus** மற்றும் ஒரு சோடி **USB-Port**களும் காணப்படுகிறது.



**OLED** தொழில்நுட்பமானது முதிர்ச்சியடைவதனால், இந்த கருத்துநிலை உபாயமானது யதார்த்தத்திலிருந்து தொலைவிலிருக்க முடியாத ஒன்றாகின்றது. இந்த நெகிழ்ச்சியான திரைகளில் ஒன்று எதிர்காலத்திலே மிகவும் சிரமமான ஒன்றாக இருக்கப்போவதில்லை.








# கைபேசிஊடாக தொலைநகல் அனுப்பலாம்

## GRETA எடுத்துச் செல்லக்கூடிய பக்ஸ் இயந்திரத்தைக் கொண்டு எங்கும் பக்ஸ் அனுப்புங்கள்

பக்ஸ் இயந்திரங்களை நிலையான தொலைபேசி இணைப்புகளுடன் தான் இணைக்க வேண்டுமென்று ஒரு தேவையுமே இல்லை. அல்லது அவைகள் அலுவலகத்திற்கோ அல்லது வீட்டிற்கோ தான் உரியவையும் என்றும் இல்லை. GSM செல்லிடத் தொலைபேசியின் வலைப்பின்னல்களைப் பயன்படுத்தி (SIM Card), எங்கெங்கே எல்லாம் செல்லிடத் தொலைபேசி சமிக்ஞைகள் உள்ளனவோ அங்கங்கிருந்து எல்லாம் பக்ஸ் இயந்திரங்களைப் இப்பொழுது பயன்படுத்திக் கொள்ளலாம். வேறுவார்த்தையில் சொல்வதானால் உங்களுடைய கைத் தொலைபேசிகள் போல அவைகளும் எடுத்துச் செல்லக்கூடியனவாக மாறிவிட்டன.



**Greta GSM** பக்ஸ் இயந்திரத்தின் எடுத்துச் செல்லக்கூடிய தன்மை பற்றியே நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கின்றோம். இதிலே **GSM** இற்கான ஒரு துவாரம் உண்டு அதினுள்ளே நீங்கள் **SIM** கார்ட்டை செருகிவிட்டு GSM செல்லிடத் தொலைபேசி வலைப்பின்னல்கள் ஊடாக நீங்கள் பக்ஸ்களை(Fax) பெறவோ அனுப்பவோ முடியும்.



இந்த பக்ஸ் இயந்திரமானது ஒரு அச்சடிப்பவராகவும் ஸ்கானராகவும் கணினியுடனோ அல்லது மடிக் கணினியுடனோ இணைக்கப்படும்பொழுது தொழிற் படுவதுடன், இது ஒரு பிரதிசெய்யும் இயந்திரமாகவும் பயன்படுத்தக்கூடியது. நீங்கள் தேமல் கடதாசியை அச்சடிப்பதற்கு பயன்படுத்தும்பொழுது அது அச்சு மைகளை எதிர்பார்க்க மாட்டாது. ஆனால் அவை இல்லாதவேளைகளில் நீங்கள சாதாரண பிரதிசெய்யும் கடதாசிகளையும் பயன்படுத்தலாம்.



இது ஒரு செல்லிடத் தொலைபேசி போன்றே இயங்குவதுடன், இதற்கென ஒரு செல்லிடத்தொலைபேசி இலக்கமும் உண்டு. நீங்கள் ஒரு காதுக் கருவியை (Headset) இணைத்துக்கொள்வதன் மூலம் இதை ஒரு செல்லிடத் தொலை பேசியாகவும் பயன்படுத்திக் கொள் ளலாம். பெற்றுக்கொள்ளும் எந்த ஒரு **SMS** செய்திகளையும் அச்சடித்துப் பெற்றுக்கொள்ளலாம். இந்த பக்ஸ் இயந்திரமானது உலாவி வரும் வியாபார ஆண்களுக்கு நிச்சயமான ஒரு இலகுவான சாதனமாகும். ஆனாலும் ஆரம்ப முதலீடு மிக அதிகமாக உள்ளது. Greta வின் செலவு அமெரிக்க டொலரில் 794 ஆக இருப்பதுடன் உங்களது செல்லிடத் தொலைபேசி வலைப்பின்னல் மாதப்பகுதிக்கான செலவினத்தையும் கட்டவேண்டியிருக்கும்.

# பியானோ கற்க ஒரு பேனா



பியானோ கற்பதற்கான பென் என்பது ஒரு சுவாரசியமான உபாயம் ஆகும். இது இசைப் புத்தகங்களை வாசிப்பதற்கு பயன்படுத்தப்படுவதுடன், அவைகளை ஒலியுடன் கூடிய இசைகளாக மாற்றியும் தருகின்றன.

ஒரு இசைப்புத்தகத்தில் உள்ள இசைக்குறிப்புகள் எப்படி ஒலிக்குமென்று உங்களுக்கு கண்டுபிடிக்க முடியாத நிலையிலே, இந்தச் சிறியளவிலான சாதனமானது பியானோ, வயலின், கிற்றார் என்பவற்றைக் கற்பதற்கு பயனுள்ள ஒன்றாக உள்ளது. எழுத்துக்கள், உருவங்கள் அல்லது ஏதாவது பக்கத்திலுள்ள இசைக்குறிப்புகள் என்பவற்றின் மீது இப் பென்னாலே கிளிக் பண்ணும்போது, அது வாசிப்பதை அடிப்படையாகக் கொண்டு ஒலிக் குறிப்புகளை இப் பேனா வழங்க வல்லது.

பியானோ கற்பிக்கும் பேனாவானது மின்சாரத்திலோ அல்லது **AAA** பற்றரிகளிலோ இயங்க வல்லது: நீங்கள் இதனைக் கற்று களைப்படையும் பொழுது **Mp3** பிளேயராகவும் செயற்பட வல்லது. நீங்கள் உங்களது ஓடியோ கோவைகளை சேமித்து வைப்பதற்காக 8 **GB** சேமிப்பக வல்லமையையும் இது கொண்டுள்ளது.

---

## Media show Espressom 5.5



Mobile Phone களிற்கான Video Converter

வேகமாகவும் இலகுவாகவும் smart phone, iPhone, PSP, Xbox 360, களிற்கு Video களை convert செய்யும் மென்பொருள் Media show Espressom 5.5

Media show Espressom 5.5 ஆனது MPEG-2, WMV, H.264, TiVo, MKV, RM/RMVB, flash, AVI, போன்ற File Format களை Convert செய்யக்கூடியது எல்லாவகையான Device களிலும் Video களை Play செய்யக்கூடிய வகையில் Video களை Convert செய்கிறது.

YOUTUBE அல்லது வேறு Playback Device களில் இருந்து நீங்கள் தேவையான Video களை இதன்மூலம் Convert செய்யலாம்.


Media show Espressom 5.5 Support செய்யக்கூடிய Device கள்





- **NEW Acer**: E200, F900, M900, X960
- **Apple**: iPhone, iPhone 3G, iPod Touch, iPod Nano, iPod Classic
- **NEW Blackberry**: Bold 9000, Curve 8900
- **NEW HTC**: Diamond, Hero, Magic, Touch
- **NEW LG**: GC900, KM900, KU250, KU900R
- **Microsoft**: Xbox 360, Zune
- **NEW Nokia**: E66, E71, N82, N86, N95, 5800 XpressMusic, 6300, 6730C,
- **NEW Samsung**: i7500 Galaxy, i8510
- **Sony**: PlayStation Portable (PSP), PlayStation 3
- **NEW Sony Ericsson**: C510, G900, K810i, W880i, Z770i
- **NEW Sony Walkman**: NWZ-S738F, NWZ-A828

# மிக வேகமான புத்தக ஸ்கானர்

உலகில் மிக விரைவான ஸ்கானர் இதோ வருகிறது. இது தற்போதைக்கு ஒரு வடிவமைப்புகளுக்கு முன்மாதிரியானதாக, பேராசிரியர் Masatoshi Ishikwa மற்றும் அவரது டோக்கியோ பல்கலைக் குழுவினரால் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த மிக விரைவான ஸ்கானரானது ஒரு நிமிடத்தில் 200 பக்கங்களை கொண்ட புத்தகத்தை ஸ்கான் செய்ய வல்லது.






மிகப் பார்வை மிக்கதாக இந்த ஸ்கானர் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கமராக்கள் **1280x1024** றிசலுஷன்களைக் (Resolution) கொண்ட frame களை **500fps** வேகத்தில் பிடிக்க வல்லதாக உள்ளது.

இந்த ஸ்கானிங் செயற்பாடு ஒவ்வொரு பக்கத்தையும் இரண்டு முறை கிளிக் பண்ணுகிறது. ஒன்று ஒழுங்கு வெளிச்சத்திலும் அடுத்தது லேசர் வெளிச்சத்திலும் ஸ்கானிங் செய்யப்படுகின்றது. மென்பொருளின் உதவியுடன் முப்பரிமாண பக்கங்களின் உருவத்தை கட்டுவதற்காகவே லேசர் கிளிக் செய்யப்படுகிறது என்பதே இதன் அர்த்தமாகும். இன்னும் மிக விரைவான ஸ்கானரின் சிறியளவிலான வடிவம் ஒன்றை உருவாக்கவும் அதனை செல்லிடத் தொலைபேசியில் வைத்திருக்கக்கூடியதாகச் செய்வதற்கும் ஆய்வுகள் விரும்பப்படுகின்றன. இது உண்மையாகி விட்டால் உங்களுடைய செல்லிடத் தொலைபேசியையே ஒரு நிமிடத்தில் 200 பக்கங்களை ஸ்கான் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

# Gmail Notifier Plus 2.1.2

நீங்கள் வாசிக்காத எல்லா ஈமெயில்களினதும் preview யை இது அனுமதிக்கின்றது. இந்த Gmail Notifier Plus application ஆனது நீங்கள் வாசியாத எல்லா ஈமெயில்களினதும் preview யை அனுமதிக்கின்ற ஒரு கருவியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஈமெயில்களை மீளப் பெற்றுக்கொள்வதற்காக Gmail பாதுகாப்பளிக்கப்பட்ட **RSS feed** யைப் பயன்படுத்துகிறது. ஆகவே இது மிகவும் பாதுகாப்பானது. ஒரு இயந்திரத்தினுடைய தங்கியிருக்கும் encryption னைப் பயன்படுத்தி இதனுடைய நம்பகத்தன்மைகள் சேமிக்கப்படுகின்றது.

தேவைப்பாடுகள்: Gmail இல் பதிவு செய்யப்பட்ட கணக்கு ஒன்று தேவைப்படுகிறது




| | |
|---|---|
| Developer: | Baptiste Girod |
| License / Price: | Freeware / FREE |
| Size / OS: | 1.1 MB / Windows 7 |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# கைபேசி ஊடாகக் கொடுக்கல் வாங்கல்

**இனிவரும் காலங்களில் பொருட்களை சந்தையில் வாங்குவதற்கு பணத்தையோ அல்லது கிறடிட் கார்டுகளையோ எடுத்துச்செல்ல தேவையில்லை.கைபேசி மட்டும் போதும்.**

## முதலாவது Data micro SD-based தொடர்பற்ற பணம் செலுத்துகை முறை

Tyfone னின் side Tap micro SD கார்டைப் பயன்படுத்துவதை அடிப்ப டையாகக் கொண்டு பணம் செலுத்துதல் கொடுக்கல் வாங்க ல்களை செல்லிடத் தொலைபேசிகள் மூலம் அதிகாரமளிப்பதற்கான தொட ர்பற்ற பணம் செலுத்துகை முறை மையானது முதல் தரவாக உருவாக்க ப்பட்டுள்ளது.



side Tap micro SD கார்டானது எந்தத் செல்லிடத் தொலைபேசியிலும் உள்ள micro SD துளைக்குள்ளே செலுத்தக்கூடியதாக உள்ளது.

ஆகவே **side Tap** காட்டினைக் கொண்டுள்ள எந்த செல்லிடத் தொலைபேசியும் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

இந்த முறைமையானது micro SD கார்ட்டுக்குள்ளே ஏற்றப்பட்டுள்ளது. இந்த உபாயமானது பல முறை மைகளுடன் ஒத்துப்போகக் கூடியதாக பரந்தளவில் பயன்படுத்தப்படுவதாக உள்ளது. micro SD கார்ட்டை யை நீங்கள் கொள்வனவு செய்யும்பொழுது நீங்கள் உங்களுடைய வங்கி மற்றும் நிதித் தகவல்களை அந்தக் கார்ட்டுக்குள்ளே பதிவேற்றம் செய்ய வேண்டி ஏற்படும். ஆகவே தான் நீங்கள் பின்பு கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும்பொழுது அதனைப் பயன்படுத்திக் கொள்ள லாம்.

கட்டணம் செலுத்தும் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன் படுத்துவதைத் தவிரside Tap micro SD கார்டானது 1GB சேமிப்பு வல்லமையுடன் வருகின்றது. அதனால் உங்களுடைய தரவுகளை வழமைப் பிரகாரம் சேமித்துக்கொள்ளவும் உதவுகின்றது. இந்த முறைமையானது 2010 இன் இறுதிப்பாதியில் வெளியிட்டு வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# றிமோட் கொன்றோல் வீடு

**உங்களது வீட்டு உபகரணங்களை இயங்க வைப்பதற்கும் நிறுத்துவதற்கும் உதவும் வயரற்ற தூரத்தில் இருந்து இயக்கும் கருவித் தொகுதி**

இந்த உபாயமானது நேரடியாகவே உங்கள் பிரதான இணைப்பில் பொருத்தப்படலாம். இந்த இணைப்பின் ஊடாக நீங்கள் விரும்பும் 4 மின்சாரத்தில் இயங்குபவைகளைத் தெரிவு செய்து கொள்ளலாம். அதன் மூலமாக இந்த தூரத்தில் இருந்து இயக்குவதில் உள்ளடக்கப்பட்ட, தெரிவுசெய்யப்பட்ட, மின்சாரத்தில் இயங்குபவைகளைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

இந்த உபாயத்தை மின்னிணைப்பில் பொருத்துவது சுலபமானதாகத் தெரியவில்லை. இதற்காக நீங்கள் தகுதி வாய்ந்த மின்னிணைப்பாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வது சிபார்சு செய்யப்படுகிறது. இந்த தூரத்தில் இருந்து இயக்கும் வீச்செல்லையானது 50 மீற்றர் வரைக்குமாகும்.

சில வேளைகளில் நாங்கள் வீட்டு உபகரணங்களை அல்லது விளக்குகளை தூரத்திலிருந்தே நிறுத்துவதற்கு அல்லது இயங்க வைப்பதற்கு விரும்புகிறோம். அந்த நேரங்களில் நீங்கள் கட்டிலே படுத்துக் கிடக்கும்பொழுது நீங்கள் நிறுத் துவதற்கு மறந்த உபகரணங்களையோ அல்லது விளக்குகளையோ எழுந்து சென்று நிறுத்த விரும்ப மாட்டீர்கள்.

இங்கே 4 PORT களைக் கொண்டு, வயரற்ற, தூரத்திலிருந்தே இயக்கும், சுவிச் ஒன்று தூரத்திலிருந்து கட்டுப் படுத்தும் வசதியுடன் வருகின்றது.

இந்த 4 A,B,C,D PORTகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு தொடர்புடைய நான்கு PORTகளை நிறுத் தவும் இயங்க வைக்கவும் கூடியதாக உள்ளது.



# துல்லியமான சென்சர் - 40-megapixel

## Pentax 645D DSLR


**Pentax 645D DSLR** என்பது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கொடாக்கினால் **(Kodak)** தயாரிக்கப்பட்ட **40MP** சென்சர் லென்சுடனும் **AFOX IX+ autofocus** முறைமையுடனும் 11 சென்சர் புள்ளிகளுடனும் வருகிறது.

**Pentax 645D DSLR** ஆனது பெரிய கண்ணாடி அரிய காட்சி பார்ப்பானுடன் அது **98 %** மான பார்வை புலத்தை அனுமதிக்கிறது. இத்துடன் **LCD screen** உடனும் **921k pixel** றிசலூசனுடனும் **(Resolution) SD** மற்றும் **SDHC** நினைவு அட்டைகளை **(Memory Slot)** செலுத்தக்கூடியவாறான இரட்டை நினைவு அட்டை துளைகளையும் இது கொண்டிருக்கின்றது.









இந்த **Pentax DSLR** ஆனது ஒரு அரைகுறை அழுத்த அமைப்புடைய கூட்டுக்குள்ளே வைக்கப்பட்டுள்ளதுடன் இது மக்னீசியம் ஸ்ரீல் எலோய் ஆல்ஆன சட்டகத்தை **(Magnesium -steel alloy frame)** உள்ளடக்கியுள்ளது. ஏற்படக்கூடிய சேதார இடர்களைக் குறைப்பதற்காகவும், காலநிலை மற்றும் தூசுகளில் இருந்து காப்பதற்காகவும் 70 அடைப்பிகளையும் கொண்டிருக்கின்றது.


இது ஒரு அரைகுறை கட்டமைப்புக்குள் அமைக்கப்பட்டிருந்தாலும் இதனுடைய மொத்த நிறையானது அதனுடைய பாரமான பற்றரிகள் நினைவுக் கார்ட் உட்பட 1.48 கிலோகிராமுக்கு கீழாகவே இருக்கின்றது.

இந்த **645 D** ஆனது ஜப்பானிய சந்தையில் மே மாதமளவில் சூடு பிடிக்குமெனவும் அதனுடைய விலை அப்போது **$ 9,500** இருக்குமெனவும் அத்தோடு வில்லைகளுக்காக **$1,100** மேலதிகமாக செலுத்த வேண்டியும் இருக்கும். **US** மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இது எப்போது அனுப்பப்படும் என்ற தகவல் இன்னும் கிடைக்கவில்லை.

# உங்களுடைய நாயைத் தொலையவிடாத கைபேசி

உங்களுடைய செல்லப்பிராணிகள் எங்கிருக்கின்றன என்பதைக் கண்டுபிடிப்பதற்கு உங்களது செல்லிடத் தொலைபேசியைப் பாவிக்கும் தொழில்நுட்பத்தை **View Ranger** மென்பொருள் தொழில்நுட்பத்தின் பயன்பாடு உங்களுக்கு வழங்குகிறது. **Retrieva** னின் **GPS dog collar** என்பதன் புதிய பதிப்பு உங்களுக்கு இதை வழங்குகிறது.





இந்த **View Ranger** மென்பொருளானது உங்களது செல்லிடத் தொலைபேசியில் புகுத்தப்பட்டு உங்களுடைய நாயின் கழுத்துப் பட்டியுடன் தொடர்பை ஏற்படுத்தி **SMS** கள் ஊடாக தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கிறது. உங்களது நாயின் வேகம், அதனுடைய திசை, செல்லும் திசை என்பன பற்றிய தகவல்களை எல்லாம் நீங்கள் உங்களுடைய செல்லிடத் தொலைபேசியில் பார்த்துக் கொள்ளலாம். இந்த மென்பொருளானது வீதிப் படங்கள் போன்ற தகவல்களையும் இணைத்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் உங்களது நாய் எங்கே இருக்கிறது என்பதைப் பற்றிய நல்ல பார்வையை நீங்கள் கொண்டிருக்க முடியும்.




இந்த **View Ranger** மென்பொருளில் அடங்கியுள்ள ஏனைய அம்சங்களில் உலகளாவிய தேசப்பட உள்ளடக்கம் இடம்பெற்றிருக்கின்றது. மற்றும் செல்லப்பிராணி கழுத்துப் பட்டியின் நிலை குறித்த சிறந்த அறிக்கையில் அதனுடைய மின்கலத்தின் ஆயுட்காலம் என்பனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் புதிய செல்லிடத் தொலைபேசியின் வழித்தடத்தைக் கண்டுபிடிக்கும் ஆற்றலானது **Retrieva** கழுத்துப் பட்டிகள் மற்றும் **View Ranger** செய்மதி Navigation மென்பொருளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது ஒவ்வொரு நாயினதும் கழுத்துப் பட்டிகளிலுள்ள பெட்டிகளில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த முழுமையான நாய்களை வழித் தொடரும் செல்லிடத் தொலைபேசி முறைமையானது மலிவானதல்ல. புதிய Retrieva நாய் கழுத்துப்பட்டியின் விலை 200 பவுண்கள் அல்லது $ 300.70 களாகும். அத்துடன் உங்களுக்கு வலைப்பின்னல் தொடர்பாடல்களுக்காக ஒரு மாதத்திற்கு மேலதிக செலவாக 9.99 பவுண் அல்லது $ 15 செலவாகும்.

# காவிச்செல்லக்கூடிய ஸ்கானர்


VuPoint PDS-ST410-VP Magic Wand என்பது ஒரு எடுத்துச் செல்லக்கூடிய ஸ்கானர் ஆகும். இது 600 x 600 வரைக்குமான றிசலூஷன் கொண்ட **A4** அளவு பக்கங்களை ஸ்கான் செய்யும் தகைமை வாய்ந்தது. முழு றிசலூஷன் அளவிலான ஒரு **A4** பக்கத்தினை ஸ்கான் பண்ணுவதற்கு கிட்டத்தட்ட 28 செக்கன்கள் எடுப்பதோடு அதனை கறுப்பு வெள்ளையில் ஸ்கான் பண்ணுவதற்கு 4 செக்கன்கள் மாத்திரமே எடுக்கும்.




**Magic Wand** எடுத்துச் செல்லக்கூடிய ஸ்கானர் ஆனது ஒரு மைக்ரோ **SD** கார்ட் துவாரத்தைக் கொண்டுள்ளது. இத் துவாரமானது உங்களுக்கு ஒரு மைக்ரோ **SD 32GB** வரைக்குமான நினைவகக் கார்ட்டை செலுத்துவதற்கு உதவுகின்றது. ஸ்கான் பண்ணப்பட்ட ஆவணங்களை சேமிப்பதற்காக **32GB** கொண்ட ஒரு மைக்ரோ **SD** கார்ட்டை செலுத்துவதற்கு இத் துவாரம் உதவுகின்றது.

இதன் மூலமாக உங்களுக்கு **USB** இணைப்பு கிடைப்பதுடன் இதனுடன் சேர்ந்து ஸ்கான் பண்ணப்பட்ட ஆவணங்களை கணினிக்கு பதி விறக்கம் செய்வதற்காக, இணைக்கப் பயன்படுத்துவதற்கான **USB** கேபிள் களும் இத்துடன் கிடைக்கின்றன. இது **AA** பற்றரிகளில் இயங்குவதுடன் புத்தகங்கள் கடின உறைப் புத்தகங்கள் என்பவற்றை ஸ்கான் செய்வதற்கும் இது பயன் படுத்தப்படுகின்றது.


இது **Windows** மற்றும் **Mac** என்பவற்றுடன் ஒத்து இயங்குவதுடன், ஸ்கான் பண்ணப்பட்ட ஆவணங்களை மாற்றிக்கொள்வதற்கு எந்தச் செலுத்திகளையும் **(drive)** வேண்டி நிற்பதில்லை. இதன் செலவு **$ 99** ஆகும்.




# மையில்லாத பிறின்டர்கள்:
## அச்சடிக்கலாம், அழிக்கலாம் ஆனால் தாள் விரையமாகாது.

**Prepeat மையில்லாத பிறின்டர்கள், ஆவணங்களை அச்சடிக்கின்றன, அழிக்கின்றன, மீள அச்சடிக்கின்றன**

இப்படியான ஒரு நிலைமை உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். அச்சடித்த ஆவணத்தில் உள்ள ஒரு சிறிய தவறு காரணமாக அவைகளை நீங்கள் மீண்டும் மீண்டும் அச்சடிக்க நேர்ந்திருக்கும். உண்மையில் இது உங்களுக்கு நிறையத் தாள்களை வீணாக்கி இருக்கும். தாள்களையும், பணத்தையும், சூழலையும் பாதுகாப்பதற்காக எங்களுக்கு மையில்லாத பிறின்டர்கள் தேவையாக உள்ளது. இந்தப் பிரின்டர்களுக்கு ஆவணங்களை அச்சடிப்பதற்கு மை தேவையில்லை. அத்துடன் அவைகள் பிழையாக அச்சடிக்கப்பட்ட உள்ளடக்கங்களை அழிப்பதற்கு விடுவதுடன் அதே தாள்களிலே மீள அச்சடித்தும்




இந்த **Prepeat** பிறின்டரின் உள்ளே எந்தவிதமான மைப் புட்டியும் இருப்பதில்லை. இது பக்ஸ் பிறின்டர்கள் பாவிக்கும் அதே நுட்பத்தையே பயன்படுத்தி அதாவது விசேட தேமல் தலைகளையும் பிளாஸ்ரிக் தாள்களையும் பிறின்ட் அடிப்பதற்கும் ஆவணங்களை அழிப்பதற்கும் பயன்படுத்துகின்றன. **Prepeat** பிறின்டரைக் கொண்டு மையில்லாது பிறின்ட் எடுப்பதற்கு உங்களுக்கு விசேடவிதமான தாள் தேவை. இந்தத் தாளானது அதை எறிவதற்கு முன்னர் ஆயிரம் தடவைகள் பிறின்ட் எடுப்பதற்கு உங்களை அனுமதிக்கிறது.



அச்சடித்தல் தொடர்பான நல்ல பசுமையான எண்ணங்களை இந்த **Prepeat** பிறின்டர் தந்தாலும் அதனுடைய தாளும் அச்சடிக்கும் இயந்திரமும் மலிவானவையல்ல. ஆயிரம் விசேட தாள்களுக்காக நீங்கள் முன்னதாகவே **$ 3,300** களையும் பிறின்டருக்காக **$ 5,517** களையும் செலவழிக்க நேரிடும். ஆகவே இந்தத் தொழில்நுட்பத்தை உங்கள்அலுவலகத்தில் அல்லது வீட்டில் பாவிப்பது என்பது இப்பொழுது ஆரம்பிக்கக்கூடிய ஒன்றாக இல்லை. நீங்கள் சில வருடங்கள், இதன் விலை குறையும் வரை காத்திருக்க வேண்டியதாக உள்ளது.

# USB X-ray படத்தை எண்ம முறைப்படுத்தல் (Digitizer)

சிகிச்சையளிப்பவர்கள் மற்றும் பற் சிகிச்சையளிப்பவர்கள் தங்களுடைய நோயாளிகளின் மருத்துவம் மற்றும் பற்சிகிச்சைப் பதிவுகளை சேமித்து பாதுகாத்துக் கொள்வதற்காக, நோயாளிகள் முகாமைத்துவ முறைமையை பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுக்கு தங்களுடைய எக்ஸ்றே படங்களை டிஜிற்றல் முறையில் பேண விரும்புவார்கள். எக்ஸ்றே படங்களை டிஜிற்றலாக்குவதற்கு அதனை அவ் எக்ஸ்றே பிலிம்களை கமரா கொண்டு படம் பிடித்து அதனை கணினிகளுக்கு மாற்றிக் கொள்வதே மரபு வழியான செயற்பாடாக இருந்து வந்தது. ஆனாலும் இது சில சிக்கல்களை ஏற்படுத்தும்.



எக்ஸ்றே பிலிம்களை டிஜிற்றல் முறைமைக்கு கொண்டுவரும் மிகச் சுலமான வழியானது **USB** எக்ஸ்றே பிலிம் டிஜிற்றைசரைப் **(Digitizer)** பாவிப்பதாகும். இது எக்ஸ்றே பிலிம்களை வாசிக்கும் அல்லது ஸ்கான் பண்ணும் ஒரு சிறிய சாதனமாகும். இது எக்ஸ்றே பிலிம்களை வாசித்து அல்லது ஸ்கான் செய்து USB யூடாக உங்களுடைய கணினிகளுக்கு பரிமாற்றிக் கொள்ளும். இந்த உபகரணமானது எக்ஸ்றே படங்களை 50 மடங்கு பெரியதாக உங்களுடைய கணினித் திரையில் பெருப்பித்து பார்த்துக் கொள்ளவும் உதவுகிறது.

இந்த எக்ஸ்றேக்களை டிஜிற்றல் முறைக்கு மாற்றுவது பல் வைத்தியரைப் பொறுத்த வரையில் மிகவும் சிபார்சு செய்யப்படுகின்றது. அவர்கள் இவைகளை சுலபமான முறையில் டிஜிற்றல் முறைப்படுத்தி நோயாளிகளின் பற் படங்களை நோயாளிகள் பதிவு முகாமைத்துவ முறைமையிலேயே சேமித்து வைத்துக் கொண்டு, எதிர்கால மீள்பரிசீலனை முகாமைத்துவங்களுக்கு பயன்படுத்தலாம். இவ் உபாயத்தின் ஏனைய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

- இந்த செருகிவிட்டு செயற்படுத்தும் **(Plug and Play)**எளிய எக்ஸ்றே வாசிப்பியானது, உங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு, தங்களுடைய பல்லின் நிலைமை குறித்து, அதனுடைய முழுமையான பெரியளவிலான படத்தைப் பார்ப்பதன் மூலம், தெளிவடைந்து கொள்ள உதவுகிறது.
- எக்ஸ்றே பிலிம்களை டிஜிற்றல் படங்களாக இலகுவில் மாற்றியமைக்கிறது.
- எக்ஸ்றே பிலிம்களை அதனுடைய முன்பிருந்த அளவை விட 50 மடங்குகள் வரைக்குமாக பெரிதாக்குகின்றது.
- செருகிவிட்டு செயற்படுத்தும்போது **USB** ஊடாகவே மின்சாரம் கிடைக்கின்றது.
- வோல்ரேஜ் பிரச்சினை எதுவுமின்றி செயலாற்றுகின்றது. **(110v / 220v)**
- இந்த எக்ஸ்றே வாசிப்பியானது அளவில் சிறியதாக இருக்கின்றது. நீளம் 84 மி.மீ. : அகலம் 7 மி.மீ: உயரம் 80மி.மீ நிறை 400கிராம்



# மொபியடப்ரர்

## கணினி இல்லாமலே USB flash drive இல் உள்ள MP3 பாட்டுகள், படங்கள், Ringtone போன்றவற்றை கைபேசியில் பதிவுசெய்ய சிறந்த வழி

## Mobiadapter USB flash drive இல் உள்ளவற்றை செல்லிடத்தொலைபேசியில் வாசிப்பதற்கு உதவும் SD –to-USB பொருந்தச் சொருகி (Adapter)




**USB flash drive** களை செல்லிடத் தொலைபேசியைக் கொண்டு வாசிக்க உதவும் **SD** யையும் **USB** யையும் இணைக்கும் பொருந்தச் சொருகி Mobiadapter என்பது நேரடியாக USB **flash drive** இல் உள்ளவைகளை செல்லிடத் தொலைபேசியிலேயே வாசிக்க அனுமதிப்பதற்காக **SD** யையும் **USB Adapter** யும் இணைப்பதற்கான ஒரு பொருந்தச் சொருகியாகும்.

உண்மையில் **Mobiadapter** ஆனது **SD** அல்லது மைக்ரோ **SD** காா்ட்டுக்கான துவாரங்கள் உள்ள கைத் தொலை பேசியிலேயே பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.









இந்த சிறிய பொருந்தச் சொருகி **(Adapter)** ஆனது ஒரு தீப்பெட்டி அளவானதாகும். அதற்கு வெளியிலிருந்து மின்சாரம் தேவையில்லை. **PDA** அல்லது செல்லிடத் தொலைபேசியிலிருந்தே அது மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும். **USB flash drive** களிலுள்ள உள்ளடக்கங்களை நீங்கள் வாசிக்க விரும்பினால் இந்த **Mobiadapter** ஆனது உங்களுக்கு நிச்சயம் இலாவகமானது. கடந்த காலங்களிலே இதனைச் செய்வதற்கு **USB drive** இல் உடைய தரவுகளை கணினியூடாக ஒரு நினைவக அட்டைக்கு பரிமாற்றம் செய்தே இதனைச் செய்யக்கூடியதாக இருந்தது.

இந்த **Mobiadapter** ஆனது கமரா, **MP3** பிளேயர் போன்ற சாதனங்களுக்கும் பயனுடையதாக இருக்கின்றது. மைக்ரோ **SD** துவாரமில்லாமல் **SD** துவாரம் மட்டுமே கொண்டவைகளுக்காக உங்களிடம் மைக்ரோ **SD**யிலிருந்து **SD** க்கு இடையிலான ஒரு பொருந்தச் சொருகி தேவையாக உள்ளது. இந்தச் சிறிய பொருந்தச் சொருகியானது **$ 59** என சிறிது அதிகரித்த விலையுடையதாக காணப்படுகிறது.

# 56 megapixel துல்லியம் கொண்ட டிஜிற்றல் கமரா

## Leaf Aptus-II 10R




தொழில்சார் புகைப்படப் பிடிப்பாளர்களை இலக்காகக் கொண்டு **Leaf** ஆனது ஒரு உயர் முடிவுடைய டிஜிற்றல் கமராவை தயார் செய்துள்ளது. **Leaf Aptus-II 10R** ஆனது ஒரு 56 **megapixel** சென்சர் உள்ளடக்கதுடன் வருவதுடன், பெரும் எடுப்பிலான விலையாக 24,995 யூரோவாக உள்ளது. (எமது நாட்டின் மதிப்பின்படி கிட்டத்தட்ட 25 இலட்சங்களுக்கு மேல்)

**Leaf Aptus -II 10R** உயர் செயற்பாடுடைய கமராவாகும். அது 56 **megapixel** சென்சரை கொண்டிருப்பதுடன், 56 x 36 மி.மீ. யை அளவிடுகிறது. நிமிர்ந்த, கிடையான எந்த வகை அமைப்பு படங்களிலும் இடைத்தரத்தின் முழு அகலத்தை பிடிக்கக்கூடிய ஆற்றலுடன் இது வருகின்றது. அதேவேளையில் நிமிர்ந்த, கிடையான இரண்டு நிலத் தோற்றப்படங்களுக்கும் மாறிக் கொண்டு இருக்கும்பொழுது நீங்கள் கமராவினை நிறுத்த வேண்டிய தேவையோ அல்லது அதனுடைய முக்காலியிலிருந்து அகற்ற வேண்டிய

இந்த கமராவின் ஏனைய நல்ல அம்சங்களாக இது தொடுதிரைக் காட்சியைக் கொண்டிருப்பது மற்றும் 80 மற்றும் 800 க்கு இடைப்பட்ட வீச்சை **ISO** வகுத்தமைக்க கூடியதாக உள்ளது. ஒரு **FPS** சட்டக விகித்தைக் கொண்டிருப்பது மற்றும் 200 மற்றும் 2000 பதிப்புகளைத் தவிர்ந்த **Hasselblad** 5 தொடர்களுடன் பொருத்தப்பாடாக அமைவது போன்ற சில அம்சங்களைக் குறிப்பிடலாம். இந்த உயர் முடிவுத் திறனுடைய 56 **MP** கமராவானது கட்டிடக்கலை மற்றும் உற்பத்திப்பொருள் வைப்பு என்பவற்றில் நிமிர்ந்ததான, கிடையான புகைப்படங்களை எடுப்பதற்கு மிகச் சிறந்தது என **Leaf** உரிமை கோருகின்றது. இது இன்றே கொள்வனவு செய்யக்கூடிய நிலையிலுள்ளது.

# Netgear 3G WiFi router

### புறநகர்பகுதியில் வசிப்பவர்களும் இணைய சேவையை பயன்படுத்தலாம்.



**Netgear 3G WiFi router**

நீங்கள் புறநகர்பகுதியில் வசிப்பவரா? நீங்கள் இணையதள சேவையை பெறமுடியாமல் இருக்கலாம், ஆனால் தற்பொழுது இணையதள சேவையை தங்கள் குடும்பத்துடன் **3G** வசதி மூலம் பகிர்ந்து கொள்ளலாம்.

**3G** மூலம் நகரங்களிலும் புறநகர் பகுதிகளிலும் சிறந்த சேவையை பெறமுடியும். தற்பொழுது **Netgear** மற்றும் Ericsson நிறுவனங்களின் கூட்டு முயர்ச்சியால் உருவாக்கபட்ட **MBRN3300E** என்ற 3G WiFi router வந்துள்ளது. இதில் ஒருங்கிணைக்கப்பட்ட **firewall** மற்றும் 3G Modem மும் உள்ளது. இதனை **802.11n** தர கோட்பாட்டில் வேலை செய்யும் விதமாக வடிவமைக்கபட்டுள்ளது. இந்த **Netgear 3G WiFi router** ஐ பயன்படுத்த **SIM card** ம் சேவை நிறுவனங்களின் **HSPA** இணைப்பு சேவை திட்ட வசதியும் தேவைப்படுகிறது. இந்த **HSPA** இணைப்பு மூலம் உங்கள் குடும்பத்தினருடன் இணையவசதியை பகிர்ந்து கொள்ளலாம்.

நீங்கள் எங்கு சென்றாலும் இணைய பயன்பாட்டை உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதற்கு வசதியாக இதனுடன் **CAR Charger** ம் மற்ற மின் தேக்க உபகரணங்களும் இணைக்கப்ட்டுள்ளது. எதுவாயினும் இந்த **Router** சிறியதானது அல்ல, எனினும் நீங்கள் இதை பயன்படுத்துவதற்கு சிறந்தது.

# கணினி வைரசின் வரலாறு

ஆரம்ப காலங்களில் புளொப்பி டிஸ்க்கு களில் (அகற்றக்கூடிய ஊடகம்) வைரசுகளைப் பரப்புகின்ற முறையாக இருந்து வந்த முறைமை உண்மையாகும். **Bulletin boards** மற்றும் ஒன்லைன் மென்பொருள் பரிமாற்ற முறைகளும் 80 களின் இறுதியில் வைரசுகளின் பர-வுகைக்கான பிரதான வழிகளாக எழுந்து நின்றன. இறுதியில் உண்மையில் எல்லா வகைகளிலும் இணையமும் அதன் வடிவங்களுமே இவ் **Virus** தொற்றுக்கு மூல காரணமாக மாறியிருந்தது. கணினி வைரஸ் வரலாற்றின் நேரக் கட்டப் பிரிவுகளிலே அதன் வரலாற்றை பின்வருமாறு தருகின்றோம்.


Richard Skrenta

1982 மிகவும் தீவிரமான முதலாவது வெளியிடப்பட்ட வைரசானது எல்க் குலோனர் என எண்ணப்பட்டது. இது Richard Skrenta என்பவரால் எழுதப்பட்டது. புளொப்பி டிஸ்க் ஊடாக பரவிய இந்த **Virus** அப்பிள் டொஸ் 3.3. கணினிகளை தொற்றுச் செய்தது.

1983 கணினி வைரஸ் என்ற சொல் மேலெழும்பத் தொடங்கியது. தென் கலிபோனியா பல்கலைக்கழகத்தின் விறெட் கோகென் என்பவருக்கே இது அநேகமாக பெயர் எடுத்தது.

1986 ஆரம்ப கால கணினி வைரசுக்கள் தோன்றுகிறது. ஆக முந்திய ஒன்று பாகிஸ்தானில் இருந்து வருகிறது. அது பிறெயின் என்று அழைக்கப்படுவதுடன், புளொப்பி டிஸ்க்கின் பூட் செக்ரர் வைரஸ் ஆக அது இருக்கிறது.

1987 முதலாவதான வைரசுக்களின் பைல் தோன்றத் தொடங்குகிறது. பைல் கொமான்ட் டொட் கொம் **(command.com)**என்ற அத்தியாவசிய முறைமையை பெரிதும் பாதிக்கின்றது.

1988 றொபேட் மொறிசால் எழுதப்பட்ட **ஆர்ப்பனேற் வேம்** வலைப்பின்னலிலே கிட்டத்தட்ட 6,000 கணினிகளை செயலிழக்கச் செய்கிறது. அந்தக் காலத்திலே அது மிகவும் நன்கு அறியப்பட்டது. இந்த வருடத்தில் தான் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. இந்த கஸ்கேட் வைரஸ் Encoding செய்யப்பட்ட முதலாவது வைரசாக எண்ணப்பட்டதுடன், கண்டுபிடிக்கப்பட்டது.

1989 எயிட்ஸ் ற்றோஜன் தோன்றியது. இது ஒரு தனித்துவமானதாக இருந்தது. ஏனெனில் இது அகற்றப்படுவதற்கு கட்டணம் கேட்டது.

1990 வைரசுக்கு எதிரான மென்பொருள்கள் தோன்றத் தொடங்கியது.

1991 சிமன்ரெக் ஆல் நோட்டன் வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் வெளியிடப்படுகிறது. முதல் மிகவும் பரந்தளவில் பரவிய பொலிமொவிக் வைரஸ் (இது பரவும்பொழுது அதனுடைய தோற்றத்தை மாற்றிக் கொள்ளுகின்றது) ரெகியுலா வெளியிடப்படுகிறது.





symantec.

1992 1,000 க்கு மேற்பட்ட வைரசுக்கள் தற்போது இருப்பதாக எண்ணப்படுகிறது.

1994 குட் ரைம்ஸ் என்று அறியப்பட்ட முதலாவது பெரிய வைரஸ் குழறுபடி மேல் வருகிறது.

1995 முதலாவது தடவையாக பெரிய சொல்லான வைரஸ் எழுந்து வருகிறது. அது ஒரு கருத்து நிலையாக அறியப்படுகிறது.

1999 டேவிட் எல் சுமித் ஆல் எழுதப்பட்ட மெலிசா வைரஸ் எண்ண முடியாத ஆயிரக்கணக்கான பிசி களில் தொற்று ஏற்படுத்துகின்றது. 80 மில்லியன் டொலர் கணிக்கப்பட்ட சேதமாக இருக்கின்றது. மைக்கிரோ சொப்ற் அவுட் லுக் விலாசப் புத்தகத்திலுள்ள (Address Book ) விலாசங்களுக்கு தானாகவே இது பிரதிகளை அனுப்பி பரவுகின்றது. இதன் எழுத்தாளர் பின்பு 20 மாதங்கள் சிறை வைக்கப்பட்டார்.




2000 இந்த ஆண்டு மே மாதத்தில் ஐ லவ் யு **(I LOVE YOU )** என்ற வைரஸ் பிலிப்பினோ மாணவன் ஒருவனால் எழுதப்பட்டது. மில்லியன் கணக்கான கணினிகளுக்கு தொற்றுச் செய்கின்றது. இது மெலிசாவை ஒத்ததுதான் ஆனாலும் வலைப்பின்னல் ஊடாக மீண்டும் கடவுச் சொற்களை அனுப்புகின்றது.

2001 ஜுலை மாதத்தில் ஹோட் றெட் வேம் ஆனது ஆயிரக்கணக்கான வின்டோஸ் **NT /2000** சேவர்களை தொற்றுச் செய்து 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சேதாரங்களை ஏற்படுத்தியதாக கணிக்கப்படுகிறது.

2003 ஜனவரி சிலமர் எனப்படுகிற பூச்சி விரைவான வேகத்தில் பரவி நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான பிசிகளை தொற்றுச் செய்தது.

# கணினி வைரஸ் என்றால் என்ன?

கணினி வைரஸ் என்பது சிறிய மென்பொருள் புறொகிராம்களாகும். அவைகள் ஒரு கணினியிலிருந்து ஏனைய கணினிகளுக்கு பரவி அந்தக் கணினிகளின் செயற்பாட்டில் தலையிடுகின்றன.

உங்களுடைய கணினியிலுள்ள தரவுகளை ஒரு வைரசானது அழிக்கிறது. அல்லது சேதமாக்குகின்றது. உங்களுடைய ஈமெயில் புறொகிராம்களைப் பயன்படுத்தி அது மற்றக் கணினிகளுக்கு பரவுகின்றது. அல்லது உங்களுடைய வன்தட்டிலுள்ள எல்லாவற்றையும் அழித்துப் போடுகின்றது.

கணினி வைரசானது அநேகமாக உங்களது மின்னஞ்சல் செய்திகளிலுள்ள, இணைப்புக் கோப்புக்கள் ஊடாகவோ அல்லது உடனடி செய்திகளுடாகவோ பரவுகின்றது. அதனால்தான் யாரிடமிருந்து வந்தது, அதை நீங்கள் எதிர்பார்த்திருக்கிறீர்களா, என்று அறிந்தாலொழிய மின்னஞ்சல் இணைப்புக் கோப்புக்களை நீங்கள் திறக்கக்கூடாது என்பது அத்தியாவசியமானது. சிரிப்புக்குரிய படங்கள், வாழ்த்து மட்டைகள், அல்லது ஓடியோ வீடியோ கோப்புக்கள் ஆபாச படங்கள் என்பனவற்றின் இணைப்புக் கோப்புக்களில், வைரஸ் மறைந்திருக்கலாம். மாறு வேடத்தில் இருக்கலாம்.


இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்வதன் மூலமாகவும், கணினியில் வைரசுகள் பரவலாம். நீங்கள் பதிவிறக்கம் செய்யும் கோப்புக்களில் புறொகிராம்களில் அல்லது சட்டத்திற்கு மாறான மென்பொருள்களில் அவை ஒழிந்திருக்கலாம். கணினி வைரசுகளை தவிர்ப்பதற்கு, உங்களுக்கு உதவுவதற்கு, நீங்கள் எப்பொழுதும் உங்களுடைய கணினியை வைரஸ் எதிர்ப்பு கருவிகளுடனும், அவைகளின் இற்றைப்படுத்தப்பட்ட இறுதி ஆயத்தங்களுடனும், வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். அண்மைக்கால அச்சுறுத்தல்களை அறிந்து வைத்திருப்பதுடன், உங்களுடைய கணினியை நியமமாக பயன்படுத்துபவராக செயற்படுத்திக் கொண்டிருப்பதுடன், நீங்கள் இணையத்தில் உலாவரும்போது, கோப்புக்களை பதிவிறக்கம் செய்யும்பொழுது, இணைப்புக் கோப்புக்களை திறக்கும்பொழுது, சில அடிப்படை ஒழுங்குகளை பின்பற்ற வேண்டியவர்களாகவும் இருக்கின்றீர்கள். உங்களுடைய கணினிக்கு வைரஸ் ஒருமுறை பிடித்து விட்டால், அதன் வகை, அது அங்கே வருவதற்கு உபயோகித்த முறை என்பன முக்கியமானதல்ல. அதனை அகற்றுவதும், அதனது மேலதிகமான தொற்றலைத் தடுப்பதுமே முக்கியமானதாகும்.

அடுத்த இதழிலும் Virus தொடரும்....

# CD Burner களின் வேகங்களைத் தெரிந்துகொள்ளுதல்

நீங்கள் ஒரு CD Burner வாங்கச் செல்லும்பொழுது அதிலுள்ள இலக்கங்கள் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா? இலக்கங்களின் அர்த்தம் என்ன என்பது குறித்து நீங்கள் ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா? ஒரு ஒருங்கிணைப்பு 12x2x24 என்று ஒரு configuration இந்த மூன்று இலக்கங்களுக்குமிடையிலே X அடையாளம் இருப்பதைக் கண்டிருப்பீர்கள். இது CD drive யின் வேகத்தை சுட்டிக்காட்டுகின்றது. X ஆனது தரவு ஒரு நிமிடத்திற்கு தரவு பரிமாற்றத்தில் 150KB க்காக அங்கே நிற்கிறது. அந்த ஒவ்வொரு இலக்கமும் CD drive செயற்படுத்தும் வெவ்வேறுபட்ட செயற்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

ஒரு CD –R drive என்பது இரண்டு செய்கைகளைக் கொண்டது. பதிவு செய்தல், disc இலிருந்து வாசித்தல். ஒரு CD –RW drive ஆனது மூன்று செயற்பாடுகளைக் கொண்டது. பதிவு செய்தல், மீள எழுதுதல் (அழித்து மீண்டும் பதிவு செய்தல்) வாசித்தல். drive னுடைய வேகத்தைப் பார்க்கும் பொழுது முதலாவது இலக்கம் உதாரணத்திலுள்ள 12 ஆனது CD drive இன் வேகத்தை அதாவது CD – W Compact disc இல் எழுதும்போது அதனுடைய வேகத்தை குறிக்கிறது. ஆகவே மேலுள்ள உதாரணத்தின்படி ஊனு னசைநை ஆனது தரவை 12 தடவைகள் 150KB/second என பதிவு செய்யக்கூடியது. இரண்டாவது மேலுள்ள உதாரணத்தின் இலக்கம் 2 ஆனது ஒரு CD- RW இலுள்ள disc இன் தரவை CD drive இல் மீள எழுதக்கூடிய வேகத்தை குறித்து நிற்கிறது.





ஆகவே மேற்படி உதாரணத்தில் CD drive ஆனது ஒரு disc இலே 2 தடவைகள் 150KB/second என்ற வேகத்திலே மீளஎழுதக்கூடியது. வகைமாதிரியாக இரண்டாவது இலக்காமானது திரும்ப எழுதும் வேகமானது, முதலாவது இலக்கமான அதாவது எழுதும் வேகத்தை விட சிறியதாக உள்ளது. ஏனெனில் மீள எழுதுவதானது முதலில் எழுதுவதை விட மிகவும் மெதுவான செயன்முறையாக உள்ளது. மேலுள்ள உதாரணத்திலுள்ள 24 ஆனது disc யிலிருந்து தரவுகளை வாசிப்பதற்கான வேகத்தை சுட்டிக்காட்டுகிறது. இந்த CD drive ஆனது compact disc லிருந்து தரவுகளை 24 தடவைகள் 150KB/second என்ற வேகத்தில் வாசிக்கும். CD-R ஆனது ஒரு தடவைகளில் மாத்திரம் பதிவு செய்யக்கூடிய disc கள் ஆகும். ஒருமுறை தரவுகள் burn பண்ணப்பட்டால் அவைகள் நிரந்தரமாகி அழிக்க முடியாது. CD- RW தகடுகளானவை மீள பதிவு செய்து, அழித்து மீண்டும் மீண்டும் பதிவுசெய்யக்கூடிய dics கள் ஆகும். அநேகமான Audio CD players விசேடமாக பழைய மாதிரிகள் வெறுமனே வாசிக்க மட்டும் கூடிய R disc கள் ஆகும். ஆகவே CD -R களேயே இசைகளைப் பதிவதற்கு மிகவும் உகந்தன. CD- RW ஆனவை தரவுகளை சேமிக்கவும், தரவுகளை காப்பெடுப்பதற்காகவும் உள்ள வகைமாதிரியாக உள்ளன.

# Drive களின் காவல்காரன்

MK Drive Access Control 2.0.3

உங்களுடைய தனிப்பட்ட files களை யாரும் copy செய்ய அனுமதிக்காது. Drive க்குச் செல்வதைக் கட்டுப்படுத்தும், Access Control கருவியானது ஒரு சிறிய இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய application ஆகும். தேவையில்லாதோர் உங்களுடைய drives களுக்குச் செல்ல முடியாதவாறு lock செய்ய இது உதவுகிறது. MK Drive Access Control இன் சில முக்கிய இயல்புகள் இங்கே உள்ளன.




உங்களின் தனிப்பட்ட files களை ஏனைய பாவனையாளர்கள் copy செய்வதைத் தடுப்பதற்காக உங்களின் USB drive களை அடைத்து வைத்தல். உங்களுடைய கோப்புக்களில் உள்ளவற்றை CD/DVD என்பவற்றில் எழுதுவதைத் தடுப்பதற்காக CD, DVD Drive இன் கதவுகளைப் பூட்டுதல். வின்டோஸ் drive உட்பட எல்லாவிதமான drive களிலும் உட்செல்லுதல் பூட்டுதல், மற்றும் திறத்தல் மற்றும் வின்டோஸ் Explorer இல் காட்டுதல் மற்றும் Password களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்ட நிரலை மாற்றுதல் என்பன இதன் விசேட சிறப்பம்சங்களாகும்.


| | |
|---|---|
| Developer: | Muhammadreza Karimi |
| License / Price: | Freeware / FREE |
| Size / OS: | 813 KB / Windows NT / 2K / XP / 2003 / Vista / 2008 / 7 |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# ரகசியம் காப்பான் KeyScrambler Professional 2.6.0.2


உங்களின் முக்கிய தனிப்பட்ட தகவல்களை keyloggers இடமிருந்து பாதுகாப்பதற்காக, உங்களின் keystrokes குறி முறையாக்கம் encrypt செய்யும் ஒரு இணைய உலாவி உள்ளிடுக்கி (web browser plugin) ஆகும். KeyScrambler என்பது ஒரு இணையஉலாவி உள்ளிடுக்கி web browser plugin.

இது உங்கள் தனிப்பட்ட தரவுகளை, keyloggers களிடமிருந்து பாதுகாப்பதற்காக, உங்களின் keystrokes களை encrypt செய்கின்றது. Professional ரீதியான KeyScrambler ஆனது இணையப் பக்கத்தில் நீங்கள் தட்டச்சு செய்யும் அனைத்தையும் பாதுகாக்கின்றது. உங்களுடைய கடவுச்சொல் passwords ஆக இருக்கலாம், கடனட்டை இலக்கங்களாக இருக்கலாம், தேடும் பொருட்களாக இருக்கலாம், அல்லது மின்னஞ்சல் செய்திகளாக இருக்கலாம். எல்லாவற்றையும் இது பாதுகாக்கின்றது.




உங்களுடைய keyboard யில் நீங்கள் தட்டச்சு செய்யும்பொழுது இவ் keys களானவை உங்களுடைய இணைய உலாவியை வந்தடைவதற்கு முன்னதாக அந்த Operating system க்கு உள்ளேயான ஒரு பாதையில் பயணிக்கின்றன. Keyloggers அந்தப் பாதையிலே நிலை நிறுத்தி வைத்துக்கொண்டு உங்களுடைய விசைப் பதிவுகளை (keystrokes) அவதானித்து பதிவுசெய்து கொள்ளுகின்றன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களானவை பின்னர் குற்றவாளிகளிடம் அனுப்பப்பட்டு, அவர்கள் உங்களிடமிருந்து களவாடுவதற்குப் பயன்படுத்துவார். இக் KeyScrambler ஆனது உங்களுடைய keystrokes களை Keyboard இன் **driver** மட்டத்திலேயே, Operating system இன் ஆழத்திலேயே encrypt செய்து விசைப் பதிவாளர்களை (keyloggers) தோல்விடையச் செய்து விடுகிறது. encrypt செய்யப்பட்ட விசை அடிகள் (encrypted keystrokes) உங்களுடைய இணைய உலாவியை அடையும்பொழுது KeyScrambler ஆனது decrypts செய்துவிடுகிறது. அப்பொழுது நீங்கள் அடித்த விசைகளைக் கண்டாலும் keyloggerள் குறிமீள்முறையாக்கம் செய்யப்பட்ட விசைகளையே (encrypted keystrokes) பதிவு செய்து கொள்வார்கள். அவைகள் முற்று முழுதாக பொருத்தமானதாக இருக்க மாட்டாது.




இவைகள் anti-virus மற்றும் anti - spyware programs போல் அல்லாமல், அவைகள் அறிந்த இந்த Keyloggers விசைவுப் பதிவாளர்களை அகற்றுவதிலேயே தங்கியுள்ளன. இந்த KeyScrambler ஆனது அறிந்த அறியாத எல்லா Keyloggers களிடமிருந்தும் உங்களைப் பாதுகாக்கும். KeyScrambler இல் மிகமுக்கியமானது என்னவெனில் உங்களுடைய பாதைக்கு வராமலே உங்களைப் பாதுகாக்கின்றது. நீங்கள் இந்த Programme யைப் பற்றி எதையும் அறிந்து வைத்திருக்கத் தேவையில்லை. வேறுபட்ட வித்தியாசமான விடயங்கள் எதனையும் நீங்கள் செய்யவும் தேவையில்லை. ஆனால் KeyScrambler உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை முழு அளவில் பாதுகாக்கும்.


| | |
|---|---|
| Developer: | QFX Software Corporation \| |
| License / Price: | Shareware / USD 29.99 |
| Size / OS: | 1.2 MB / Windows 2K / XP / Vista |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# உங்களுக்கென்று ஒரு ரீ.வி கொன்றோல் றூம்

## VidBlaster 1.11 Beta/1.02

ஒரு எளிய விடுமுறை வீடியோவில் இருந்து நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பு வரையான வீடியோவை உருவாக்குவதற்கான இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வீடியோ அமைப்பு கருவி. youtube போன்ற இணையத்தளங்களுக்காக அல்லது தனிப்பட்ட பாவனைக்கான விடுமுறை வீடியோக்களுக்காக அல்லது எந்த WorldPress



இணையத் தளத்திற்காகவும் ஒரு கிளிக்கிலேயே வீடியோ podcasts உருவாக்கி பிரசுரிப்பதற்காக வீடியோக்களை உருவாக்கி பதிவு செய்து கொள்வதற்காக இந்த VidBlaster யைப் பாவிக்கலாம். அல்லது பல கமராக்களைப் பயன்படுத்தி தொலைக்காட்சி மாதிரியான

பதிவுகளை உருவாக்குவதற்கு VidBlaster யைப் பாவிக்கலாம். அல்லது இணையத்தின் மூலமாக இதனை நேரடியாக செல்லவிடுவதற்கும் VidBlaster யைப் பாவிக்கலாம். ஒலி ஒளிபரப்புத் தரத்திலே அல்லது HD தரத்திலே பல எண்ணிக்கையானmultiple monitor மற்றும் professional video switcher களோடு ஒரு முழுமையான tv control room யைக் கூட நீங்கள் உண்டாக்கலாம்.

எந்தப் பதிப்பை நீங்கள் பாவித்தாலும் இந்த VidBlaster ஆனது இந்த வீடியோ தயாரிப்பை உங்களுடைய விரல் நுனியில் தருகின்றது. VidBlaster யை நீங்கள் முயற்சித்து அதன் முழு இயலுமையையும் மதிப்பிடுவதற்கு இது வழிசெய்கிறது.


| | |
|---|---|
| Developer: | CombiTech |
| License / Price: | Demo / USD 195.00 |
| Size / OS: | 10.6 MB / Windows XP / Vista / 7 |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# இருபரிமாணத்திலிருந்து முப்பரிமாணத்திற்கு


## 3D Combine 5.3

இருபரிமாண 2D போட்டோ அல்லது வீடியோவிலிருந்து 3D முப்பரிமாண போட்டோ, வீடியோவை உருவாக்க உதவும் ஒரு பெரிய மென்பொருள்.



3Dcombine என்பது ஒரு இருபரிமாண போட்டோ வீடியோ என்பவற்றிலிருந்து முப்பரிமாண போட்டோ அல்லது வீடியோவை உருவாக்குவதற்கு உதவும் பெரிய மென்பொருளாகும். அல்லது ஒரு Stereoscopic pair யையும் மற்றும் நீங்கள் விரும்பும் முப்பரிமாண வடிவமைப்பில் வெளியிடக் கூடியதாகும்.

வேறுபட்ட 3D உருவங்களை நோக்குவது மீதான தகவல்களுடன் இது வருவதுடன், இதனை ஆரம்பிக்க உங்களுக்கு உதவுவதற்காக மாதிரிப் போட்டோக்கள் மற்றும் கற்பித்தல் மூலங்களுடனும் இது வருகின்றது. மாற்றீடாக 3Dcombine உங்களிடமுள்ள முப்பரிமாண படங்களையும், வீடியோக்களையும் சிலவேலைகளுக்காக கையாளுவதற்காகவும் முப்பரிமாண வடிவமைப்புகளுக்கிடையே batch converting செய்வதற்காகவும் shutter glasses இன் அனேகமான வகைகளுடன் முப்பரிமாணப் படங்களையும் வீடியோக்களையும் காட்சிப்படுத்துவதற்காகவும் கூட இதனைப் பயன்படுத்தலாம்.




| | |
|---|---|
| Developer: | RPS Software |
| License / Price: | Trial / USD 49.50 |
| Size / OS: | 26 MB / Windows All |


கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# திரையைப் படம்பிடிக்கும் தொழில்சார் கருவி

## HardCopy Pro 3.2.0

HardCopy Pro என்பது திரையைப் படம் பிடிப்பதற்கு உதவும் ஒரு professional சார்ந்த Programme ஆகும். இந்த HardCopy Pro ஆனது செவ்வகமான திரையின் (rectangular screen)பகுதிகளையும் முழு வின்டோசையும் பிடிக்கக்கூடியது.








இந்தப் பிடிக்கப்பட்ட படங்கள் மிகவும் சுலபமாக வெட்டப்பட்டு வர்ண ஆழமானது மைக்கிரோவிலிருந்து ஒரு உண்மையான வர்ணப் பெறுமதிக்கு மாற்றப்படக்கூடியது. பிரபல்யமான எந்த file Format இலும் படங்களை சேமித்துக் கொள்ளலாம். அத்துடன் clipboard இலும் சேமித்து வைப்பதுடன், எந்த image editing Programme இலும் இவைகளை edit செய்தும் கொள்ளலாம். பிறின்ட் எடுத்தும் கொள்ளலாம், ஈமெயில் செய்தும் கொள்ளலாம். தனிப்பட்ட பயனாளிகளின் தேவைக்கேற்ப இந்த ஏற்பாடுகளை customize செய்வதற்கும் தெரிவுகள் அனுமதிக்கின்றன.




HardCopy Pro 3.2.0 இன் சில முக்கியமான அம்சங்கள் இங்கே உள்ளது.

செவ்வகமான பிரதேசங்கள்( rectangular areas)முழு வின்டோஸ் (whole windows) வெட்டுவதற்கு சுலபம், எடுக்கப்பட்ட உருவங்கள், மவுஸ் கேசர், எடுக்கப்பட்ட உருவங்களின் வர்ண ஆழத்தை மாற்றியமைக்கக்கூடியதாக இருத்தல், Mouse cursor யும் படம் பிடிக்கக்கூடியதாக இருத்தல், படங்களை சேமிக்கவும், பிரதிசெய்யவும் அச்சடிக்கவும், ஈமெயில் செய்யவும், எந்த இடத்திற்கும் உதாரணம் Ms word ற்கும் அனுப்பக்கூடியதாவும் இருத்தல். ஆதரவளிக்கும் file format கள் என்பன : BMP, GIF, JPG, PNG,TIF automatic படபிடிப்புகளுக்கான Timer (நேரக் கணிப்புக்கருவி) போன்றவை இதன் சிறப்பம்சமாகும்.





| | |
|---|---|
| Developer: | DeskSoft |
| License / Price: | Trial / USD 20.00 |
| Size / OS: | 312 KB / Windows All |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# ஒரு நல்ல முகாமையாளன்

## உங்களுடைய கணினியிலே உங்களுடைய DVD க்களையும் திரைப்படங்களையும் ஒழுங்கமைப்பதற்கான மிகச்சிறந்த வழி


MOVIE Label என்பது உங்களுடைய திரைப்படச் சேகரிப்புகளை ஒழுங்கமைப்பதற்கு உங்களுக்கு உதவுகிறது. படங்களை சேர்த்துக் கொள்வதற்கு தலைப்பை தட்டச்சு செய்வதன் மூலமாக படங்களை சேர்த்துக் கொள்ளுதல். Divx க்காக Barcode அல்லது உங்களது harddisk இல் scan செய்தல். உறை (Cover) வடிவமைப்பு உட்பட எல்லாத் தகவல்களும் automatically downloaded செய்யப்படுகின்றன.




எந்தத் தட்டச்சு வேலையுமில்லை. எந்தவிதமான video media க்களும் DVD. Blu-ray. Divx என்பன எல்லாம் சேர்க்கப்படக் கூடியதாக உள்ளது. MOVIE Label கள் பல்வேறுபட்ட மொழிகளில் வருவதுடன், Unicode க்கு முழுமையாக ஆதரவு தருகின்றது. தரவுத் தளத்தின் அளவு எவ்வளவாக இருந்தாலும் நிலையான தன்மையை உறுதிப்படுத்தும் ஒரு நிலையான தரவுத்தள இயந்திரத்தின் மீது MOVIE Label அமைக்கப்பட்டிருக்கிறது. MOVIE Label உடன் பல வகைப்பட்ட அறிக்கைகளை அச்சடிக்கக் கூடியதாகவும் விபரமான புள்ளி விபரங்களை மதிப்பிடக் கூடியதாகவும் உள்ளது.

MOVIE Label ஆனது English, German, Dutch, French, Spanish, Danish, Portuguese, Italian, Croatian, Czech, Norwegian, Turkish,Russian, Simplified Chinese, Traditional Chinese and Swedish ஆகிய மொழிகளில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.




தொடர்கிறது...

Developer: Code Aero Technologies


License / Price: Trial / USD 49.95

Size / OS: 12 MB / Windows 2K / XP / 2003 / Vista / Vista64 / 7 / 7 x64


கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

## MOVIE Label 2011 இன் சில முக்கிய அம்சங்கள் இங்கே உள்ளன.

- பல்வேறுபட்ட மொழிகளில் கிடைக்கக்கூடியதாக இருத்தல்
- எந்த தட்டச்சும் செய்யாமல் உங்களுடைய திரைப்பட சேகரிப்பை **(DVD. Blu-ray. Divx)** ஏனையவை முழுவதையும் பட்டியலிடலாம்.
- இயக்குபவர்கள் மற்றும் நிபந்தனைகளுடன் பல்வேறு மட்டங்களில் தேடி வகைப்படுத்திக் கொள்ளலாம். உங்களுடைய சேகரிப்புக்களை பலவேறுவகைப்பட்ட வடிவமைப்புகளில் XL, XML என்பவற்றில் கூட அனுப்பக்கூடியதாக இருத்தல்.
- உங்களுடைய சேகரிப்பிலுள்ள திரைப்படங்களுக்கான Watch trailers யை அவதானித்தல்
- இரவல்கள் மற்றும் தேவையான விடயங்கள் குறித்து தரவுகளைப் பேணுதல் .
- விரைவானதும் சுலபமானதுமான Data Entry.
- உங்களுடைய திரைப்படங்களைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் online database களில் இருந்து **downloaded** செய்தல்.
- Cover art மற்றும் URL இல் இருந்து trailers வரையானதை, ஒரு கிளிக்கின் மூலம் வகைப்படுத்தித் தேடுதல், ஒரு பொத்தானை கிளிக் செய்வது போன்று சுலபமாக உங்களது database யை வகைப்பிரித்தல்.
- நீங்கள் தேடும்பொழுது முடிவுகள் நீங்கள் தட்டச்சு செய்தவாறாக காட்சிப்படுத்தப்படல்.
- முன்னேற்றகரமான வகைப்பிரித்தலும் தேடுதலும் பல மட்டங்களிலேயே கிடைக்கக்கூடியனவாக உள்ளன. Loan Management செய்தல்.
- நீங்கள் மீண்டும் ஒருமுறை DVD யை இழந்து விடாமல் இருப்பதை உறுதிப்படுத்துதல்.
- அறிக்கைகளும் அனுப்புகைகளும், உங்களுடைய தரவுகளை அச்சடித்தலும் அனுப்புதலும் ஒரு mouse-click வேலையிலேயே முடிந்து விடுகிறது.




இதன் தொழில்சார் பதிப்பானது உங்களுடைய சொந்த அறிக்கைகளை நீங்களே உருவாக்க உதவுகிறது. (அல்லது உங்களிடம் உள்ளவைகளை சரிசெய்து தருகின்றது) நம்பத்தகு தன்மையும் வேகமும், MOVIE Label களானது உறுதியான Client / server யை database இல் கட்டப்பட்டிருக்கிறது.





அதாவது உங்களுடைய சேகரிப்பானது எந்தளவிற்கும் அதிகரித்துச் செல்ல்லாம். பல்வகைப்பட்ட சேகரிப்புகளை முகாமைத்துவம் செய்கிறது, நீங்கள் எத்தனை எண்ணிக்கையில்லா **database**களையும் உருவாக்கி அவைகளை தனித்தனியாக வைத்துக் கொள்ளலாம்.

# ஒரு கண்டிப்பான பண்பாட்டு வேலி
## Namo CyberFence

பாலியல் உள்ளடக்கங்களைத் தடைசெய்யக்கூடிய மிகவும் இலாவகமானதும் இலகுவானதும் 500,000 மேற்பட்ட பாலியல் வீடியோக்களை Play பண்ணுதல் மற்றும் கணினிகளிலே Play பண்ணுதல் மற்றும் Edit பண்ணுதல் ஈமெயில் மற்றும் Instant Messenger IM ஊடாக அனுப்புதல் என்பவற்றை தடைசெய்யும் ஒரேயோரு Software CyberFence ஆகும். அடிக்கடியும் தன்னியக்கமாகவும் CyberFence யை update செய்வதானது, இன்றைக்கும் நாளைக்கும் இணையத்திலே அறிமுகப்படுத்தப்படும் பாலியல் வீடியோக்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்கின்றது.

பிரத்தியேகமான CyberFence அம்சங்களானவை: USB தொடர்பு CD ஊடாக பாலியல் படங்கள், file கள் அறிமுகப்படுத்தப்படுவதையும் தடுக்கின்றது. திருட்டுத்தனமாக உங்களுடைய சின்னப்பிள்ளைகள் தாண்டிச் செல்ல முடியாது. ஏனெனில் அது இன்று இணையத்தில் வரும் 90 % இற்கு மேற்பட்ட அதிகமான வீடியோக்கள் அனைத்தையும் அணைத்து விடுகின்றது. CyberFence ஆனது பாவனை குறித்த நோக்கு மற்றும் பாவித்த தடங்கள் என்பன குறித்த அறிக்கைகளையும் உருவாக்குகின்றது. உங்களுடைய பிள்ளை தாங்கள் 10 நிமிடமே பார்த்தாகக் கூறலாம்.




ஆனால் CyberFence உங்களுக்கு பொய் சொல்ல முடியாது. Online இல் இருக்கும் நேர வரையறைகள், மற்றும் chat யை தடைசெய்தல், என்பவற்றுக்கான மாற்றியமைக்கக்கூடிய கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. உங்களுடைய பிள்ளைகளுக்கு வேண்டிய கணினி நேரத்தை வழங்கி விட்டு, அவர்கள் Home work செய்வதற்கான நேரம் வந்த உடன், CyberFence கணினியை அணைத்து விடுகிறது. அல்லது வீட்டுவேலை (Home work) க்கு internet யைப் பயன்படுத்தவேண்டிய பொழுது அவைகள் சல்லாபத்திற்கான (Chat) வசதிகள் அனைத்தையும் மூடி விடுகின்றது. உங்களிடம் கட்டுப் படுத்துவதற்கும், கண்காணி ப்பதற்கும், internet செயற்பாடுகளைப் பதிவுசெய்து கொள்வதற்குமான வசதியுள்ளது.

எவ்வாறு பாவிக்கப்பட்டது என்பதற்கான வரலாற்றை அழித்துவிட முடியாது. சிறுபிள்ளைகள் எந்த எந்த குறும்புகளைப் பயன்படுத்தினாலும், அவற்றைச் செய்ய முடியாது. ஒரு முறை இந்த Namo CyberFence பாவித்துப் பாருங்கள். அது என்னெவெல்லாம் செய்யக்கூடியது என்று பரீட்சித்துப் பாருங்கள்.

**Namo CyberFence** இன் சில முக்கிய அம்சங்கள் இங்கு உள்ளன: Media Blocking ஐ அழித்தல், வயது வந்தோருக்கான வீடியோக்கள் உங்களுடைய கணினியிலே Play பண்ணப்படுவதை அடைத்தல், இணையத்தளத்தை அடைத்தல், உங்களுடைய கணினியிலே வயது வந்தோருக்கான இணைத்தளத்தை பார்வையிடுவதைத் தடுத்தல், programs யைத் தடுத்தல், பல்வேறுபட்ட file களை பரிமாறுவதையும், Chat செய்வதையும் உங்களுடைய கணினியிலே user ஆல் தெரிவு செய்யப்பட்ட programs ஓடுவதையும் தடுத்தல். **Time Controls:** கணினி அதிகமாகப் பயன்படுத்துவதை தடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு பிற்பாடு உங்களுடைய கணினிகளை Shuts down செய்தல் அல்லது மூடி விடுதல் போன்றவை இதன் சிறப்பம்சமாகும்.


| | |
|---|---|
| Developer: | SJ NAMO INC |
| License / Price: | Trial / USD 3.99 |
| Size / OS: | 5.8 MB / Windows 2K / XP / 2003 / Vista |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# படம் பார் பாடம் படி

## ScreenSteps 2.8

5.10 நிமிடங்களிலேயே நீங்கள் அறிவு ரீதியாக கட்புல விபரமான பாடங்களை உருவாக்கலாம் visual document களை எல்லோரும் விரும்புகிறார்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்காக, நீண்ட அறிவுறுத்தல்களை வர்சிப்பதைக் காட்டிலும் ஒரு படத்தைப் பார்த்து அறிந்து கொள்வது சுலபமானது. இந்த ScreenSteps ஆனது கட்புல பயிற்சி சாதனங்களை உருவாக்குவதை மிகமிக சுலபமாக்கி விடுகிறது.




நீங்கள் கற்பிக்க முயற்சிக்கும் செயல்முறைகளின் ஒவ்வொரு படிமுறைகளையும் படம் எடுங்கள். அந்தப் படங்களானவை automatically ஆக அவைகள் எடுத்த ஒழுங்கிலேயே ஒழுங்குபடுத்தப்படுகின்றன. திரையின் உரிய இடங்கள் மீது focus செய்வதற்காக அந்தப் படங்களை வெட்டி முக்கியப்படுத்தப்பட வேண்டியவைகளை முக்கியப்படுத்துங்கள். திரும்பச் சென்று ஒவ்வொரு படியையும் விளங்கப்படுத்தும் வசனங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

செயல்முறையில் ஒவ்வொரு படிமுறைகளையும் படங்களில் காட்டி செல்வதனால் நீங்கள் அதிகம் எழுத வேண்டியதில்லை உங்களுடைய பாடங்களை PDF க்கோ அல்லது HTML க்கோ மாற்றுங்கள். நீங்கள் உங்களுடைய சொந்த HTML களையோ அல்லது XML தகடுகளையோ வேண்டுமானால் உருவாக்கிக் கொள்ளலாம். இந்த ScreenSteps software யைக் கொண்டு 5, 10 நிமிடங்களிலேயே ஒரு visualஆன பாடத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.


இந்த ScreenSteps இல் சில முக்கியமான அம்சங்கள் இங்கே உள்ளன. Screen படப்பிடிப்பிற்கான உள்ளடங்கிய அமைப்பு, வெட்டும் கருவி, பதிப்புக் கருவிகள் வட்டம், சதுரம், வட்டச் சதுரம் எந்த நேரத்திலும் மாற்றியமைக்கக்கூடிய பதித்தல்கள், (குழப்பம் ஏற்படுத்தாத பதித்தல்கள்) மூன்றாந்தரப்பு திரைப்படம் பிடித்தல் applications ஆனவை SnagIt (வின்டோஸ்) மற்றும் Snapx (Mac) என்பவற்றோடு ஒருங்கிணைப்பவை. எந்த image editor உடனும் ஒன்றிணைத்தல். நீங்கள் படப்பிடிப்புகளைப் பார்த்த ஒழுங்கிலேயே தன்னியக்கமாக அவற்றை ஒழுங்குபடுத்துல், இலகுவாகப் பதிவுசெய்தல் அல்லது படங்களை மீள வைத்தல். உங்களின் படிநிலைகளை ஒன்று சேர்த்து Preview இல் எழுத்துக்களைச் சேர்த்தல் போன்றவை இதன் சிறப்பம்சமாகும்.


| | |
|---|---|
| Developer: | Blue Mango Learning Systems |
| License / Price: | Trial / USD 39.95 |
| Size / OS: | 6.4 MB / Windows All |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# Cobian Backup Boletus 10.0.0.317 Beta

உங்களுடைய files மற்றும் directories களையும் அட்டவணைப்படுத்தி Backup செய்வதற்காக பயன்படுத்தக்கூடிய ஒரு Multi-threaded நிகழ்ச்சிநிரல். Cobian Backup என்பது ஒரு Multi-threaded நிகழ்ச்சிநிரல் ஆகும். இதனை உங்களுடைய files களையும், directories களையும் அவைகளுடைய உண்மையான இருப்பிடத்திலிருந்து ஏனைய Directories/drives க்கோ அல்லது வலைப்பின்னலிலுள்ள ஏனைய கணினிகளுக்கோ காப்புக்களை (Backup) செய்து கொள்ளவும், அட்டவணைப்படுத்திக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றது. FTP காப்பு க்குக்கூட இது ஆதரவு அளிக்கின்றது. Cobian Backup ஆனது பலவகையான Compression முறைகளுக்கும் பலமான encryption இற்கும் ஆதரவு அளிக்கின்றது. Cobian Backup ஆனது இரு வேறுபட்ட application மற்றும் சேவை பதிப்புகளாகக் கிடைக்கின்றது.




இந்த மென்பொருள் ஆனது மிகவும் சொற்பமான வளங்களைப் பயன்படுத்தி உங்களின் சொந்தமான முறைமையான background இல் இயங்குவதுடன், உங்களுடைய Backup schedule யைப் பரிசோதிப்பதுடன், தேவைப்படும்பொழுது உங்களுடைய Backup களை செயற்படுத்துகின்றது. Cobian Backup ஆனது ஒரு வழமையான backup application அல்ல. இது உங்களின் கோப்புக்களை பிரதிசெய்வதுடன், files களையும், Folder களையும் பிரதிசெய்வதுடன் ஏனைய இடங்களுக்கு அவைகளை Commpressed பண்ணுகிறது. அதன் விளைவாக ஒரு Scheduler for security copies யை உருவாக்குகின்றது. ஆகவே Cobian Backup ஆனது security copies களுக்கு ஒரு அட்டவணைப்படுத்தி என விபரிக்கப்படுகின்றது. Cobian Backup Boletus சில விசேட அம்சங்கள் இங்கே தரப்படுகின்றது. 2 GB யை விட பெரிய Zip file களுக்கான Zip 64. பலமான encryption : ஆதரவு அளிக்கும் முறைமைகளானவை Blowfish (128 bit), Rijndael (128 bit) மற்றும் DES (64 bit) program முன்னேற்றத்திற்கு உதவுவதற்கான ஒரு திறந்த உட்செலுத்திக் கட்டமைப்பு. files களின் பிரதான முறை செயலிழந்தால் files களைத் தெரிவு செய்வதற்காக மூன்று வேறுபட்ட முறைகள், அதாவது இதில் இரண்டு மேலதிக முறைகள் பயன்படுத்தப்படும். TCP / IP யைப் பயன்படுத்தி interprocess Communication நடைபெறும். இது programme பகுதிகளுக்கும் programme க்கும் இடையிலே சிறந்த தொடர்பாடலை அனுமதிப்பதுடன், உலகத்தின் வேறொரு பகுதியிலுள்ள இன்னொரு இயந்திரத்திலிருந்து நிர்வகிக்கப்படும்.


| | |
|---|---|
| Developer: | Luis Cobian |
| License / Price: | Freeware / FREE |
| Size / OS: | 14.6 MB / Windows All |


கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# i Screen Recorder Free Version

i Screen Recorder என்பது ஒரு சக்தி வாய்ந்த மற்றும் பல்லியல்புகளை உடைய திரைப்பதிவுக் கருவியாகும். இது திரைகளிலுள்ள வின்டோஸ், objects, menus, full screen (முழுத்திரை), rectangular/freehand பிராந்தியங்கள், உருளும் வின்டோஸ் இணைத்தளங்கள் என்பனவற்றை சுலமாக படமெடுத்து அவைகளை BMP அல்லது JPG format களில் சேமித்துக் கொள்வதற்கு உதவுகிறது. மேலும் இது DV, TV Tuner மற்றும் ஏனைய உபாயங்களிலிருந்தான வீடியோக்களை அல்லது உருவங்களையும் படமெடுத்துக்கொள்ள அனுமதிக்கின்றது.

அத்துடன் பதிவு செய்யப்பட்ட மீடியா file களை உலாவுவதற்கோ அல்லது திருத்தங்களைச் செய்வதற்கோ அனுமதிக்கின்றது. படம் பிடிக்கும்பொழுது இது நடவநஉவ motion க்கு ஆதரவு அளிக்கின்றது. படம் பிடிக்கும்போது இது அசைவைக் கண்டுபிடிப்பதற்கு ஆதரவு அளிக்கின்றது. அசைவைக் கண்டுபிடித்தல் தெரிவானது செயற்படுத்தப்படும்பொழுது i Screen Recorder ஆனது உருவம் நிலையாக இருக்கும்பொழுது படம்பிடித்தலை நிறுத்துகின்றது. i Screen Recorder இன் பாவனையாளர் inter face ஆனது user-friendly ஆக வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், மனதிலுள்ள எல்லா தொழிற்பாடுகளையும் சுலபமாக அடையக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. i Screen Recorder இலே 3 வகுத்தமைப்பு button கள் பிரதான window வில் உள்ளன.




i Screen Recorder இலவசப் பதிப்பில் சில முக்கியமான இயல்புகள் இங்கே உள்ளன.

திரையின் எந்தப் பகுதியையும் பதிவு செய்வதற்காக தெரிவு செய்யக்கூடியதாக இருக்கிறது. திரையிலுள்ள உருவங்களை மாத்திரமல்லாது ஒலியையும் பதிவு செய்கிறது. வீடியோப்பிடிப்பு இயல்புகள்: வேறு உபாயங்களான USB இணையக் கமராக்களிலிருந்து வீடியோ அல்லது படம் பிடித்தல்.

தொலைக்காட்சி அலைவரிசை பிடித்தல் மற்றும் அதேநேர TV, USB இணையக் கமரா போன்ற ஏனைய உபாயங்களிலிருந்து வீடியோவையும் ஒவ்வொரு படம் பிடிக்கும் கருவிக்குமான உடைமைகளை வகுத்தமைத்தல். படம் பிடிக்கும்பொழுது அசைவைக் கண்டுபிடித்தல் அசைவைக் கண்டுபிடித்தல் செயற்படுத்தப்பட்டிருக்கும்பொழுது i Screen Recorder ஆனது நிலையாக உள்ள விம்பத்தை படம் பிடிப்பதை நிறுத்திக் கொள்ளும். படங்களை Edit செய்வதற்கான இயல்புகள்: மீள அளவு செய்தல், வெட்டுதல், சுழற்றுதல், கூர்மையாக்கல், பிரகாசமாக்கல், வர்ணமாற்றம் செய்தல். மிகவும் பிரபல்யமான **format** களில் படங்களை சேமித்தல், பயனாளர் keyகளை வகுத்தெடுத்துக் கொள்ளவும் முடியும்.

| | |
|---|---|
| Developer: | i Screen Recorder Inc. |
| License / Price: | Trial / USD 24.99 |
| Size / OS: | 2.5 MB / Windows All |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# AutoRun Pro Enterprise 11.4


## CD/DVD களில் Autorun Menu களை உருவாக்க சிறந்த மென்பொருள்

AutoRun Pro Enterprise II ஆனது professional சார்ந்த AutoRun interface களை உருவாக்குவதும் சரிசெய்வதுமுடன் CD மற்றும் DVD களுக்கான AutoRun file களை உருவாக்கக் கூடியதாகவும் உள்ளது. உங்களுடைய CD உள்ளே செலுத்தப்படும்பொழுது users file களை திறப்பதற்கு அல்லது செயற்படுத்துவதற்கு ஆவணங்களை print எடுப்பதற்கு, ஈமெயில் அனுப்புவதற்கு, இணையத்தளங்களை தரிசிப்பதற்கு, CD களிலே browse ஒலியையும் இசையையும் இசைப்பதற்கு ஒரு தொழில்சார்ந்த அழகான inerface யை காட்சிப்படுத்துகிறது. இது பயன்படுத்துவதற்கு விரைவானதும் சுலபமானதுமாகும். இப் application யைப் பயன்படுத்தி எந்த users உம் விரைவாக தன்னியக்கமாக செயற்படும் தனக்கென அமைக்கப்பட்ட CD ROM களை வடிமைத்துக் கொள்ள முடியும்.

AutoRun Pro Enterprise II வின் முக்கியமான அம்சங்கள் சில:

ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தையும் காட்சிப்படுத்துதல் (உதாரணம் TXT, DOC, HTML) உரிய பிரயோகத்தில் தன்னியக்க start மூலம் எந்தப் programme யை தொடக்குதல்
URL ஆவணத்துடன் தெரிவுசெய்யப்பட்டுள்ள browser யைத் தொடக்குதல்
ஈமெயில் அனுப்புதல்
ஒன்றிணைக்கப்பட்ட Web browser யும் உள்ளக கட்டளைகளும்
ஒன்றிணைக்கபட்ட ஒலி இசைப்பிகள்
ஒன்றிணைக்கப்பட்ட RTF (Rich Text) viewer
ஒன்றிணைக்கப்பட்ட Media Player


Slide காட்சிப் படங்கள் (போட்டோ அல்பம்) நூற்றுக்கு மேற்பட்ட வடிவமைப்புக்களில் பின்புல வர்ணம் எடுப்பான வர்ணங்களும் ஊடுபுக விடும் வடிவமும் பின்புல ஒலி அலங்கரிக்கப்பட்ட திரை, அலங்கரிக்கப்பட்ட ஒலி, முழுத்திரை பின்புலமும் logo உரிம ஒப்பந்தம் எந்த file களையும் வெளியிட முன்பதாக உரிம ஒப்பந்தம் காண்பிக்கப்பட வேண்டும். users தொடர்வதற்காக முன்பதாக உரிமத்தை ஏற்றுக்கொள்வதற்கு கேட்கப்பட வேண்டும். உரிமத்தை users ஏற்றுக்கொள்ளாது போனால் இந்த AutoRun தொடர்ந்து இயங்காது.



பாதுகாப்பு உரிமம் இல்லாத பாவனையாளர்களால் CD தொடக்கப்படுவதை தடுப்பதற்கு அவர்கள் users பெயர், Password மற்றும் உறுதிப்படுத்துவதற்கான தொடர் இலக்கம் என்பவற்றை சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுவதன் மூலம் உங்களுடைய CD யை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளலாம். Programme முடிவடைவதற்கு முன்பதாக தகவல்களைக் காட்டுதல் அல்லது வெளியே செல்லலை உறுதிப்படுத்துதல் வரையறையற்ற உப பக்கங்கள்

படங்கள், bitmap, icon, JPEG, EMF, WMF, GIG (அசையும் அல்லது அசையாதது) PNG படங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

CD icon மற்றும் பக்க icon உம் title bar இல் காட்டப்படும்,CDia burn பண்ணாத பரிசோதிப்பு
Project யை மீள எழுதக்கூடிய CD யிலோ, மீள் எழுத முடியாத CD யிலோ நேரடியாக உள்ள burner யைக் கொண்டு burn செய்தல்.
ஒருதரம் செயற்படுத்தக்கூடிய file யை எழுதுதல்,புதிய folder இல் அத்திட்டத்தை பிரசுரித்தல்.
ISO CD ROM image file யை உருவாக்குதல்,Software யை நிறுவுதல்
File களுக்கான தெரிவு செய்யப்பட்ட viewer ஒன்று உங்களுடைய கணினியில் இல்லாவிட்டால் அதை நிறுவுவதவற்கு நீங்கள் விரும்பக்கூடும். உதாரணத்திற்கு நீங்கள் ஒரு PDF file ஐ திறப்பதாக இருந்தால் நீங்கள் Adobe Acrobat Reader யை நிறுவ வேண்டும். அதனை உங்களுடைய CD யிலே வைத்திருக்க வேண்டியிருக்கும். users அதனை ஏற்கனவே கொண்டிராவிட்டால் அதனை நிறுவிக் கொள்ளவும். நிறுவப்படவேண்டிய ஒன்றோ பலவோ file களை நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
Drop down menu bar மற்றும் Tool bar யையும் status bar யையும் அப்பக்கங்களுக்காக உருவாக்கவும். பல standard windows போல உங்களுடைய பக்கத்தையும் மிகவும் professional சார்ந்ததாக்கவும். அநேகமான professional application களில் உள்ளது போன்று mouse button, இன் வலது பக்கத்தை object இன் மீதோ, பக்கத்தின் மீதோ வைத்து click செய்யும்பொழுது வரும் pop-up menu வை உருவாக்குவதற்கு நீங்கள் வகுத்தமைத்துக் கொள்ளவும். CD க்கான முடிவுத் திகதி ஒன்றை, முடிவுத்திகதி குறித்துச் சொல்லுகிறது. Set object இலே செயற்படுத்துதல், செயற்படாது அமுக்குதல், காட்டுதல், ஒளித்தல் என்பவைகளைத் தெரிவு செய்யவும். Programming அறிவு தேவையில்லை நிறுவாமலே CD ROM இல் இருந்து செயற்படுத்தவும் முடியும்.




Developer: Longtion Software
License / Price: Shareware / USD 99.00
Size / OS: 8 MB / Windows All
கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# Opera Web Browser 10.5

மிகவும் வேகமானதும் சிறியதானதும் நேர்த்தியானதுமான முழு அம்சங்கள் நிறைந்த இணைய உலாவி web browser களுள் ஒன்றுமான மிகச் சிறந்த முழு அம்சங்கள் நிறைந்த internet power tool ஆன Opera சந்தைக்கு வந்துள்ளது. Tabbed browsing, pop –up blocking, integrated searches மற்றும் முன்னேற்றகரமான தொழிற்பாடுகளான Opera's ground breaking , Email programme, RSS Newsfeeds மற்றும் IRC chat என்பன இதில் அடங்கியுள்ளன. Mouse சின் ஊடான ஒரு சில clicks களினாலே நீங்கள் உங்களுடைய Opera Browser இன் உள்ளடக்கத்தையும் தோற்றத்தையும் நீங்கள் உங்களுக்கு ஏற்ற வகையில் வகுத்தமைத்து, தனிப்பட்டதாக்கிக் கொள்ளலாம்.




இந்த Opera Web browser ஆனது தொழிற்பாட்டுக்கும் பாதுகாப்பிற்கும் பயன் பாட்டுக்கும் தங்களுக்கு ஏற்றவிதமாக மாற்றியமைத்துக் கொள்வதற்கும் தேடு வதற்கும், சேமிப்பதற்கும், குறுக்கு வழிகளை எடுப்பதற்கும், இணைய உள்ளடக்கங்களை சென்று அடைவ தற்குமாக புதிய புதிய பல வகையான அம்சங்களை வழங்குகின்றது. நீங்கள் வேலைக்குச் செல்லுகின்றீர்களா, வீட்டில் வேலை செய்கின்றீர்களா இணையத் தளங்களை வடிவமைக்கின்றீர்களா? அல்லது ஒரு விரைவான உறுதியான இணைய உலாவியை இன்ரநெற்றை விரைவாக சுலபமாக சென்றடைவதற்காக தேடிக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி யானால் Opera ஆனது, உங்களுடைய online வாழ்க்கையிலே பலவிதமான தொழில்நுட்ப கருவிகளுடன் tech tool ஒவ்வொரு துறையிலும் இந்த அதிசிறந்த இணைய அனுபவத்தை உங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. Opera web browser யின் சில முக்கிய இயல்புகள் அம்சங்கள் கீழே உள்ளன.

**வேகமாக Dial செய்தல்:** - உங்களுக்கு விருப்பமான இணையத்தளங்களிற்கு செல்வதற்கு இப்பொழுது ஒரு புதுவழி உள்ளது. உங்களுடைய வேகமான Dial யைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு புதிய tab யை திறந்து விடுங்கள். தரவுகளைச் சேகரித்துக் கொள்வது சுலபமாக உள்ளதுடன், பாவனைக்கும் விருப்பமானதாக உள்ளது.




**Bit Torrent :**

பெரிய file களை download செய்வதற்காக உங்களுக்கு ஒரு பிறிதான Bit Torrent தேவைப்படாது. வெறுமனே ஒரு Torrent link கைக் கிளிக் செய்து download ஐ ஆரம்பியுங்கள்.

**விருப்புள்ள தளங்கள்:**

வேறொரு வழியில் ஒரு தளத்தை பார்க்க விரும்புகிறீர்களா? அல்லது சில cookies களை மறுக்கிறீர்களா? சில தளங்களில் மாத்திரம் pop up களை அடைக்க விரும்புகிறீர்களா? Right Click செய்து கொண்டு Edit site preference யை தெரிவு செய்து கொள்ளுங்கள்.

**Thumbnail preview:**


Opera விலே ஒரு நேரத்திலே பல tab களைக் திறந்து வைத்திருப்பது சுலபமானது. ஆனால் உங்களுக்கு வேண்டிய வீடியோ அச்சொட்டாக எந்த tab இல் உள்ளது. உங்களுடைய mouse யை எந்தப் tab இன் மேலும் கொண்டு சென்று வைத்துக் கொண்டு Thumbnail preview பாருங்கள்.




**மோசடியிலிருந்து பாதுகாப்பு:**
உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைத் திருட முனையும் இணையத்தளங்களிடமிருந்து Opera வின் முன்னேற்றகரமான மோசடிப் பாதுகாப்பு உங்களைப் பாதுகாக்கிறது.

உங்களுக்கு விருப்பமான Create search யைச் சேர்த்துக் கொள்ளுங்கள். தளத்தின் ஒவ்வொரு தேடுதல் field லும் right click செய்து Create search யை menu வில் இருந்து தெரிவு செய்யுங்கள்.

**Widgets:**
சிறிய இணையப் applications களான (Multimedia, newsfeeds, games, இன்னும் பல) உங்களுடைய desktop அனுபவத்தை மிகவும் சிரிப்புக்குரியதாக்குகின்றது. புது Widgets க்களைக் கண்டு கொள்ளவும் உங்களுக்கு விருப்பமானவைகளைச் சென்றடைய Widgets menu க்களைப் பயன்படுத்துங்கள்.





**Transfer Manger :**
ஒரு எளிய Transfer Manger வின்டோவிலிருந்து உங்களுடைய பதிவிறக்கங்கள் எல்லாவற்றையும் சென்றடைவதுடன், download தொடர்ந்து நடைபெறுவதையும் பார்த்துக் கொள்ளுங்கள்.

**Password Manger :**
Password Manger ஆனது உங்களுடைய usernames மற்றம; passwords யும் நினைவில் வைத்திருக்கின்றது. ஆகவே அதனை நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை.

**Mouse gestures:**

Opera ஆனது mouse அசைவுகளுக்கு ஆதரவு அளிக்கின்றது. பொதுவாக பயன்படுத்தப்படும் அம்சங்களைச் சென்றடைவதற்கு mouse சினால் செய்யப்படும் சில அசைவுகளை நடாத்துவதற்கு இது உதவுகின்றது.

**Notes குறிப்புகள்:**




பின்பு நீங்கள் செல்லவேண்டிய இணையத்தளங்களுடன் இணைப்பிற்கு குறிப்புகளை வைத்திருக்க முடியும். அல்லது நீங்கள் மீண்டும் பார்க்க விரும்புகின்ற எந்தக் குறிப்பிட்ட தகவலையும் நினைவில் வைத்திருக்க முடியும்.

**Keyboard Shortcuts:**

Mouse சின் அசைவுகள் போன்று Keyboard Shortcuts மூலம் உங்களுடையவேலையை விரைவானதாகவும் வினைத்திறனானதாகவும் மாற்றிக் கொள்ளுங்கள். Opera விலே Keyboard Shortcuts யைப் பற்றி அதிகம் வாசியுங்கள். ஒரே application Window விலே பல இணையப் பக்கங்களைத் திறப்பதன் மூலம் இணையத்திலே விரைவாகவும், சுலபமாகவும் உலா வாருங்கள்.

- To load and focus the panels for keyboard navigation, click F7.
- To toggle them off and on, use Shift+F4.
- To toggle the panel selector off and on, use F4.
- Ctrl+1 opens (and activates) the "Search" panel
- Ctrl+2 opens the "Bookmarks" panel
- Ctrl+3 opens the "Mail" panel
- Ctrl+4 opens the "Contacts" panel
- Ctrl+5 opens the "Chat" panel
- Ctrl+6 opens the "Notes" panel
- Ctrl+7 opens the "Transfers" panel
- Ctrl+8 opens the "History" panel
- Ctrl+9 opens the "Links" panel
- Ctrl+0 opens the "Windows" panel

**Integrated search:**

Google, eBay, Amazon, மற்றும் இன்னும் எங்களுடைய ஒன்றிணைக்கப்பட்ட தேடுதல் களங்களில் தேடுங்கள். முக்கிய தேடச் சொற்களை பயன்படுத்தி நீங்கள் address field இலும் நேரடியாக தேடிக் கொள்ளலாம்.


**Fast Forward:**

Fast Forward ஆனது அநேகமான அடுத்த பக்கத்தின் இணைப்பைக் கண்டுபிடித்துக் கொள்ளும். அதனால் search results மற்றும் image galleries போன்ற பல பக்க ஆவணங்களை இலகுவாக இடம் கண்டு பிடிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

**Voice:**

Opera interface யைக் கட்டுப்படுத்துவதற்கு அதனுடைய Voice அம்சங்கள் அனுமதியளிக்கின்றது. கதைப்பதன் மூலம் ஆவணங்களை வாசிப்பித்துக்கொள்ளலாம். இப்பொழுது வாசிப்பு தொழில்நுட்பமானது ஆங்கிலத்திலேயே வழங்கப்படுகின்றது.

# Wikitup 1.0.2




CTRL + click மூலம் எந்தச் சொல்லையும் மொழிபெயர்க்கக்கூடிய ஒரு desktop அகராதி. Wikitup என்பது Wikipedia, Wiktionary, Wikiquote என மற்றும் பல சேவைகளில் தேடுதல்களை மேற்கொள்ள உங்களுக்கு உதவும் ஒரு நேரடி application ஆகும். Screen இல் உள்ள எந்த ஒரு சொல்லின் மொழிபெயர்ப்பையும் பார்ப்பதற்கு அதன்மீது CTRL + click ஐ அழுத்த முடியும். தொடர்புடைய வீடியோக்கள், படங்கள், பாடல்களையும் இதன் மூலம் கண்டுகொள்ளலாம்.


| | |
|---|---|
| Developer: | Railroad Group Inc. |
| License / Price: | Freeware / FREE |
| Size / OS: | 5.8 MB / Windows XP / 2003 / Vista / 7 |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# VocaTalk 1.0.12 Beta

## எழுத்திலிருந்து பேச்சு, background music மற்றும் வடிவமைப்புக்களைப் பயன்படுத்தி உள்ளூர் podcast களை உருவாக்குதல்.

VocaTalk என்பது ஒலி நயங்களுடனும், பின்புல இசையுடனும் (background music) தனிப்பட்ட podcast களை உருவாக்குவதற்கான ஒரு சுலபமாகப் பயன்படுத்தக்கூடிய application ஆகும். நீங்கள் எந்த ஒரு உள்ளடக்கத்தையும் இசையைத் தெரிவு செய்து episodes களை உருவாக்கி உங்களுடைய iPod க்கோ அல்லது mp3 player க்கோ download செய்து பிரதிசெய்து ஒட்டிக் கொள்ளலாம். உள்ளடக்கம் பெரியதாக இருந்தால் VocaTalk ஆனது தன்னியக்கமாக அவற்றை 50, 60 நிமிடங்களுள்ள அங்கங்களாக உடைத்துக் கொள்ளும். பொதுப் பேச்சை அழுத்தம் செய்வதற்காக Digital signal பதப்படுத்தல் தொழில்நுட்பத்தை VocaTalk பயன்படுத்துகிறது. ஒரு VocaTalk அங்கத்திற்கு செவிமடுத்தலானது text-to-speech தொழில் நுட்பத்திலான ஒன்றைச் செவிமடுப்பதைக் காட்டிலும் சௌகரியமானது.




VocaTalk ஆனது வாசித்தல் கற்றல் அனுபவத்தை மிகவும் மகிழ்ச்சிகரமானதாக்குவதுடன், நிறைய வாசித்து படிக்கும் ஆட்களுக்கு அல்லது அவ்வாறு செய்ய விரும்பியும் நேரமில்லாத ஆட்களுக்கு மிகவும் செயற்திறன் வாய்ந்த ஒன்றாக உள்ளது. மாணவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் யார் யார் எல்லாம் புதிதாகவரும் தகவல்களுடன் தம்மை இற்றைப் படுத்திக் கொள்ள விரும்பு கிறார்களோ அவர்கள் VocaTalk யை பயன்படுத்தலாம். ஒரு VocaTalk அங்கமானது அது என்னவாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நீங்கள் வெறுமனே ஒரு உள்ளடக்கத்தை VocaTalk க்கு கொடுத்து இசையையும் அதன் விளைவுகளையும் தெரிவு செய்யுங்கள். VocaTalk ஆனது அது பின்புலத்திலே இசையை இசைக்கும்போது வாசகங்களை வாசிக்கின்றது. உங்களுடைய முறைமையிலே நிறுவப்பட்டுள்ள கிடைக்கக்கூடிய எல்லாக் குரல்களையும் அது பயன்படுத்தும். ஏனெனில் நீண்ட நேரம் நீங்கள் கேட்கும்போது ஒரே குரலால் உங்களை சலிப்படையச் செய்யமாட்டாது. பல ஒலிபெருக்கிகளால் கொண்டு நடாத்தப்படும் ஒரு ஒலி ஆவணச் சித்திரத்தைப் போலவே இது இருக்கின்றது. செவிமடுத்தல் அனுபவத்தை ஒரு ஆவணச் சித்திரத்தை ஒத்ததாக மாற்றுவதற்காக அது பந்திகளுக்கிடையிலேயே அமைதி இடைவெளிகளை விட்டுச் செல்கிறது. background music ஆனது இதனை மகிழ்ச்சிகரமானதாகவும் அதிலே ஈடுபடக்கூடிய ஒன்றாகவும் மாற்றிச் செல்கிறது. இந்தச் செவிமடுத்தலை இன்னும் சௌகரியமாக மாற்றுவதற்காக அது கவனத்தையும் கவனக் குவியத்தையும் பேணுவதுடன், உருவாக்கப்பட்ட Mp3 யிலே சில ஒலித்தாக்கங்களையும் உயர்வுகளையும் பயன்படுத்துகிறது. நீங்கள் இயக்கக்கூடிய அல்லது மூடி வைக்கக்கூடிய பல எண்ணிக்கையிலான வேறுபட்ட தாக்கங்கள் அதிலே உண்டு. உதாரணத்திற்கு நிலை மற்றும் ஒலி தாக்க நகர்வானது speeker களின் ஒலி நிலையை இலாவகமாகவும் ஆழத்தையும் மாற்றியதாகவும் எதிரொலியானதாகவும் ஒலியின் லயங்களை மாற்றுவதாகவும் இருப்பவைகள். குறிப்பு Beta Version 01.01.2011 அன்று காலாவதியாகிறது.

| | |
|---|---|
| Developer: | Ilkay Benian |
| License / Price: | Demo / N/A |
| Size / OS: | 5 MB / Windows Vista / Vista64 / 7 / 7 x64 |


கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# Babysitter and Senior Caregiver 1.6

உங்களுடைய வியாபாரத்தை மிகவும் செயற்திறனாக்குவதற்கான சக்திவாய்ந்த **software**

ஒரு அனைத்துமடங்கிய தீர்வான இந்தப் programme ஆனது திட்டமிடப்பட்ட database களையும் events களையும் உருவாக்க அனுமதிக்கின்றது. இது ஆயா (nannies) குழந்தைத் தாதிகளுக்கும், babysitters, குழந்தைப் பராமரிப்போருக்கும் குழந்தைக் கவனமெடுப்போருக்கும், அத்தியவசியமானதாக இருக்கிறது. குழந்தை நிபுணர்கள், வீட்டுப் பராமரிப்போர், நம்பத் தகுந்த கவனம் எடுப்போர், முதியோரைக் கவனமெடுப்போர், மூத்த தோழர்கள். இது அவர்களுக்கு வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான, அதனை செயற்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கான, கருவியை வழங்குகிறது. நேரடி வாழ்வுக்கும் முழு நேரம், பகுதி நேரம் தற்காலிக கவனமெடுப்பில் வேலைநேரங்களை திட்டமிடுவதற்கும், வேறு யாருமுடைய நேரங்களோடு மேலொட்டி போவதைத் தடுப்பதற்கும், அட்டவணை வகுக்கப்பட்டுள்ள நியமனங்கள் குறித்து சரியாக ஒட்டிச் செல்வதற்கும், இது அவசியமானது. இது வாடிக்கையாளர்கள் குறித்த தகவல்களை களஞ்சியப்படுத்துகிறது. அவர்களுடைய விலாசம், மருத்துவத் தகவல்கள், ஒவ்வாமை உணவுக் குறிப்புகள், தனிப்பட்ட குறிப்புகள், கருத்துக்கள் என்பவற்றை களஞ்சியப்படுத்துகின்றது. நீங்கள் விரும்பியவாறு எவ்வாறானாலும் கருத்துக்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். படங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். நீங்கள் வியாபரத்தில் இருக்கும்பொழுது, சிலவேளைகளில் நீங்கள் கவனமெடுக்கும் வாடிக்கையாளரின் எல்லா விபரங்களையும் மனதிலே வைத்திருப்பது முடியாத காரியமாகும். உங்களுக்குத் தேவையான எல்லா விபரங்களையும் உங்கள் கைகளில் வைத்திருப்பது எவ்வளவு சிறந்ததொன்று. அதனாலேயே இந்த programme இவ்வளவு இலாவகமாக உள்ளது. programme ஆனது உங்களுக்கு ஒரு customizable Date Navigator யையும், ஒரு எல்லாமடங்கிய நினைவூட்டலையும் வழங்குகிறது. இது மிகவும் நெகிழ்ச்சியானதாக உள்ளதுடன், நேர இடைவேளைகளை மாற்றுவதற்கும், பல எண்ணிக்கையான தரவுத் தொகுப்புக்களை உருவாக்குவதற்கும் ஒரேநேரத்தில் பல அட்டவணைகளைப் பார்ப்பதற்கும் அனுமதிக்கின்றது. Microsoft Outlook உடன் வேலை செய்வோருக்கு தரவுகளை Export பண்ண முடியாது. உருவாக்கிய தரவுகளை நீங்கள் பல format களுக்கு TXT, XLS, HTML, XML போன்ற வேறுபல applications களுடன் பயன்படுத்தக்கூடிய format களுக்கு உங்களால் மாற்றக்கூடியதாக இருக்கும். உங்களுடைய அட்டவணையின் printout தேவைப்படும்பொழுது நிச்சயமாக நீங்கள் அந்த சக்திவாய்ந்த print வடிவமைப்பினைப் பாராட்டுவீர்கள். அது உங்களுக்கு அந்த அட்டவணையை மிகவும் வசதியான வடிவத்தில் print எடுப்பதற்கு உதவும். பலவிதமான வடிவமைப்புகளிலிருந்து தெரிவுசெய்து, உங்களுக்கு வசதியானதிலே print எடுக்க உதவும். ஏதாவது வைரஸ் தாக்குதல்கள் நெருக்கடிகள் ஏற்பட்டால் அங்குள்ள auto backup function ஆனது, அங்குள்ள பழைய சுவடிகளை தன்னியக்கமாக அகற்றுவதற்கான வசதியைக் கொண்டுள்ளது. உங்களுடைய வியாபாரத்தை மிகவும் செயற்திறனாக்குவதற்கான சக்திவாய்ந்த மென்பொருள் (Powerful software) இதுவாகும்.







| | |
|---|---|
| Developer: | Binary House Software |
| License / Price: | Trial / USD 49.95 |
| Size / OS: | 13.7 MB / Windows All |


கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்


# Folder Defence


உங்களது file களை ஒளிக்கக்கூடிய, lock பூட்டக்கூடிய, password பாதுகாப்பளிக்கக்கூடிய மென்பொருள். உங்களுடைய தனிப்பட்ட கோப்புகளை ஒளிக்க, பூட்டி வைக்க, கடவுச் சொல் பாதுகாப்பளிக்க, உதவும் இலகுவாகக் கையாளக்கூடிய பிரயோகமே FolderDefence Free ஆகும். உங்களுடைய hard drive இலுள்ள எல்லா தனிப்பட்ட மற்றும் sensitive information களை password கொண்டு பாதுகாக்க FolderDefence Free உங்களுக்கு வழி செய்கிறது. உங்களுடைய file களையும் folder களையும் சென்றடைய முடியாதவாறும், காண முடியாதவாறும், அல்லது அவைகளை அழிக்க முடியாமலோ, மாற்ற முடியாமலோ பாதுகாத்துக்கொள்ள உங்களால் முடியும். உள்நாட்டிலோ அல்லது நேரடியாகவோ அல்லது இணையம் மூலமாகவோ எவ்வளவுதான் யாரும் முயற்சித்தாலும், பாதுகாக்கப்பட்ட தரவுகளை பாவிப்பவர்களுக்கோ, applications களுக்கோ, சென்றடைய முடியாது. FolderDefence Free ,ன் எளிமையான பயனாளர் interface ஆனது ஒவ்வொரு புது windows பயனாளிகள் மற்றும் கணினி நிபுணர்களின் தேவைகளுக்குப் பொருத்தமானதாக இருக்கின்றது. FolderDefence Free உடைய சில முக்கிய அம்சங்கள் இதோ.

file பாதுகாப்பின் தாக்கமானது, பயனாளிகளிடமிருந்தும் applications களிலிருந்தும் தீய மென்பொருள்களிலிருந்தும் foler களை மறைக்க அனுமதிக்கின்றது. பிரதான password application இன் சொந்தக்காரர் மாத்திரமே, உங்களுடைய ஒளித்த folder களுக்குச் செல்ல முடியும். பின்வரும் நான்கு பாதுகாப்பு முறைகள் கிடைக்கக்கூடியனவாக உள்ளன. Hide, Lock, Hide & Lock, வாசிப்பு மாத்திரம் (read only) எல்லா flie முறைகளின் திரள்களும் இதற்கு ஆதரவாக உள்ளன. பாதுகாக்கக்கூடிய file foler களுக்கு எந்த வரையறையுமில்லை. FolderDefence Free யை பாவிக்கும் பொழுது எந்த சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது. ஒரு தனி password ஆலேயே இந்த FolderDefence ஆனது பாவனையையும் நிறுவுகையிலிருந்து வெளியேற்றுகையையும் பாதுகாக்கிறது. பாதுகாப்பு மொடியூலை உங்களால் கண்டுகொள்ள முடியும். பாதுகாப்பு நிலையிலான ஆதரவு: முறைமை Save mode இல் இருக்கும்போதும் பாதுகாப்பு உயிர்ப்புடனே இருக்கும். தேசிய மொழிக் குறியீடுகளுடனான folder பெயர்களுக்கான ஆதரவும் உண்டு.






Developer: Privacy-care Lab

License / Price: Freeware / FREE


Size / OS: 1.3 MB / Windows XP / 2003 / Vista / 7

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# LaneCat Outside Monitoring Software 1.8.3.0

கணினிகளையும், பணியாளர்களையும், உங்களின் LAN யையும் கண்காணிப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்குமான ஒரு சக்திவாய்ந்த கருவி. LaneCat Outside Monitoring Software ஆனது உங்களுடைய பணியாளர்களின் வேலை செயற்பாட்டையும், முகாமைத்துவத்தை உச்ச நிலைப்படுத்துவதையும், இணைய வளங்களின் (allotment) ஒதுக்கல்களையும், முன்னேற்றுவதை இலக்காகக் கொண்டது. ஒரு முறை முயற்சியெடுத்து LaneCat இன் உண்மையான இயலுமை என்னவென்று பாருங்கள். LaneCat Outside Monitoring Software இல் உள்ள முக்கிய அம்சங்கள் இதோ.

LaneCat ஆனது தன்னியக்கமாக கண்காணிப்பைக் கவனித்துக் கொள்ளும் ஒரு சக்திவாய்ந்த கருவி. ஒரு கணினி LAN இன் வழியாக அனுப்பப்படும், பெற்றுக்கொள்ளப்படும், ஈமெயில்களின் பதிவுகளையும் விபரங்களையும் அதேநேரத்தில் பதிந்து வைத்துக்கொள்வதுடன், பின்பு அவைகளைப் பார்ப்பதற்காக சேமித்தும் வைத்துக்கொள்கின்றது. LaneCat ஆனது பணியாளர்களை கண்காணிக்கும் ஒரு மென்பொருளாக இருந்து கொண்டு தரிசிக்கப்பட்ட இணையத்தளங்களை அவதானித்து, அதேநேரத்திலே பார்க்கப்பட்ட ஒழுங்குக் கிரமத்திலே பதிவு செய்து கண்காணித்துக் கொள்கிறது. கண்காணிக்கப்படும் கணினியின் LAN கணினியின் Graphical, numeric வடிவங்களின், இணைய நெரிசலை நீங்கள் பார்க்கக்கூடியதாக இருப்பதுடன், குறிப்பிட்ட மட்டத்தில் இணைய நெரிசலை வரையறுத்துக் கொள்ளலாம். LaneCat ஆனது கணினியைப் பயன்படுத்தி பாவித்து பணியாளரால் அனுப்பப்படும் எல்லா செய்திகளையும் கண்காணிக்கிறது. keywords மற்றும் URL யைக் கொண்டு வடிகட்டுவதன் மூலமாக செல்லமுடியாத சில இணையத்தளங்களின் நிரல்களை முகாமைத்துவம் செய்வதற்கு அனுமதிக்கின்றது. LaneCat ஆனது பயன்படுத்துபவர்கள் IP மற்றும் MAC யையும் சீர்திருத்துவதை, அவற்றை கட்டிவைப்பதன் மூலம் தடுக்கிறது. அதேவாறே வலைப்பின்னல் வளங்களை சட்டத்திற்கு மாறாக பயன்படுத்துவதையும் தடுக்கிறது. LaneCat ஆல் வழங்கப்படும் பல வகையான அறிக்கைகளை நீங்கள் பார்வையிடக்கூடியதாக இருப்பதுடன், வேறுபட்ட அளவுகோல்களின், தகவல்களைப் பற்றியும் நீங்கள் விசாரிக்கக்கூடியதாக இருக்கிறது. LaneCat ஆனது LaneCat employee கண்காணிப்பு மென்பொருளானது காண முடியாத ஒரு வகையிலே தொழிற்படுவதுடன் கண்காணிக்கப்படும் கணினியானது உங்களுடைய உத்தரவின்றி அதனைக் கண்டுபிடிக்க முடியாது.




| | |
|---|---|
| Developer: | XMCCT |
| License / Price: | Trial / USD 40.00 \| |
| Size / OS: | 64 MB / Windows XP / 2003 / Vista / XP X64 / 2008 / 7 |

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# Humyo இணையத்தளத்தில் ஒரு சேமிப்பகம்

பல வருடங்களுக்கு மேலாக அறிமுகப்படுத்தப்பட்ட Humyo ஆனது Online இலே file களை சேமிப்பதற்கும் பரிமாறுவதற்கும், ஒன்றிணைந்த சேவைகளை வழங்கும், கட்டணமற்ற முறையில் 10 GB சேமிப்பகங்களை வழங்கும் சேமிப்பகம் ஆகும். இதன் தரவுப் பாதுகாப்பானது 128bit SSL encryption கவனமெடுக்கப்படுகிறது. java நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட்டு Humyo.com இலே உங்களுடைய file களையும் folder களையும் பதிவேற்றம் செய்வதற்கு நீங்கள் drag-and-drop செய்ய வேண்டும். மாற்றீடாக நீங்கள் ஏனைய இணையத்தளங்களிலிருந்து file களை இழுத்து விடலாம்.

இது பெரும் சிக்கலுடன் அழகாக செயற்படுகிறது. ஒரு நேரத்தில் நீங்கள் ஒரு file யையோ folder யையோ தான் பதிவிறக்கம் செய்யவோ, பதிவேற்றம் செய்யவோ முடியும். நீங்கள் விரும்பும் எவ்வளவு பெரிதானதாகவும் இது இருக்கலாம். அது உங்களுடைய களஞ்சியப்படுத்தல் வசதியைப் பொறுத்தது. ஆனால் நீங்கள் பல்வகை folder களை பதிவேற்றம் செய்வதற்கு தயார்படுத்திவிட்டு, மறந்துவிட முடியாது. இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு desktop programme இருக்கிறது. இதைப் பாவிப்பதற்கு நீங்கள் ஒரு premium account holder ஆக இருக்க வேண்டியுள்ளது. அத்துடன், வேறு சில பயனுள்ள அம்சங்களாக desktop humyo ஆனது தன்னியக்ககமான back-up களை வழங்குகிறது. 14 நாட்களுக்கு பரீட்சார்த்தகமாக இது இலவலசமாகக் கிடைக்கிறது. humyo premium ஆனது உங்களுக்கு 100GB சேமிப்பகத்தை வழங்குவதுடன் ஒரு மாதத்திற்கு 4.59 பவுண்ஸ் செலவாகவோ ஒருவருடத்திற்கு 45.99 பவுண்ஸ் செலவாகவோ உள்ளது. இணையச் செய்திகளும் மீள்பார்வைகளும்: வியாபார ஆலோசனைகள், செய்திகள், ஒரு தடவை upload செய்யப்பட்டால் நீங்கள் உங்கள் humyo.com file களுடன் பல வழிகளில் ஊடாட முடியும். உதாரணத்திற்கு உங்களுடைய எழுத்தாவணங்களை உங்களுடைய desktop இலே திருத்தம் செய்து பதிவேற்றம் செய்து humyo ஆனது மாற்றங்களை சேமித்து இணையவழிப் பிரதியில் சேமித்து விடும். மீடியா file கள் ஆனவை humyo.com இல் இருந்து நேரடியாக ஒலியேற்படுத்தும். அத்துடன், படங்களை நீங்கள் இயல்பாகவே பார்க்கவும் முடியும். தனித்தனிப் படமாகவோ அல்லது ஒரு slides காட்சி மூலமாகவோ நீங்கள் அதனைப் பார்க்கலாம். இணையம் பதிக்கப்பட்ட ஏதாவது ஒரு செல்லிடத்தொலைபேசி மூலமாகவும் நீங்கள் இந்த file களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

humio.com ஆனது வேறு வழிகளிலும் திறன் வாய்ந்ததாக உள்ளது. file மாதிரிகள் என்ன வகையான file என்பது தன்னியக்கமாக இனம் காணப்படுவதுடன், உரிய உரிய வகைப்பாடுகளில் தரம் பிரிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு MP3 கள் பதிவேற்றம் செய்யப்பட்டு அவைகள் my music என்பவற்றில் போடப்படும் (My files / humio.com இல் பதிவேற்றம் செய்யப்பட்ட file கள் பிரிவு) அங்கே அவைகள் Album ஆல் தரம் பிரிக்கப்படலாம். பகிர்ந்து கொள்வதும் ஒன்றிணைந்து செயற்படுவதும் இலகுவானது. சனசமூக இடத்தைப் பயன்படுத்தி நீங்கள் இலகுவாக நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு humio.com file களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். இதன் அர்த்தம் ஒருங்கு செயற்படுவது என்பது humio.com உடன் ஒன்றாகச் சேர்ந்து கொள்வது என்பதாகும். ஆனால் பாதுகாப்பு நோக்கிலே அது என்னவென்று வாதாட முடியாது. ஏனெனில் எல்லாவற்றுக்கும் மேலாக அது இலவசமாக ஒரு வருடங்களுக்கு மேலாக வெளியிடப்பட்டது. humio.com ஒரு Online file சேமிப்பகம். அது உங்களுக்கு 10GB சேமிப்பு வசதியை தருகின்றது.






# Screen Ruler 2.1.2

ஒரு சிறிய பயன்படுத்த சுலபமான அடிமட்டக் கருவிப் பிரயோகம். இந்த Screen Ruler பிரயோகமானது ஒரு எளிய கருவியாக UI stuff இல் பணியாற்றுவோருக்காக வடிவமைக்கப்பட்டது. ஆகவே நீங்கள் உங்களுடைய control களை pixel களிலும் அங்குலங்களிலும், சென்ரிமீற்றர்களிலும் அளவிட்டு நிலைநிறுத்திக் கொள்ளலாம். ஆகவே நீங்கள் அதை drag and drop செய்து விடுவதன் மூலம் அதனை நகர்த்திக் கொள்ளலாம். அதனுடைய விளிம்புகளில் drag and drop செய்வதன் மூலம் அதன் அளவை மீளமைத்துக் கொள்ளலாம். அதன் மீது double click செய்வதன் மூலம் அதனை விரித்துக்கொள்ளலாம். application, மீது மேலும் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள அதனுடைய Context menu வைப் பயன்படுத்துங்கள்.







Developer: Rob Latour

License / Price: Freeware / FREE

Size / OS: 947 KB / Windows 2K / XP / Vista / 7

கணினிக்களம் **DVD** வெளியீடு 7 ல் பெற்றுக்கொள்ளலாம்

# Hub, Switch, Router

## Hubs, Switches மற்றும் Routers என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு என்ன?

**Routers** களுக்கும் **Switches** களுக்கும், **Hubs** களுக்கும் **Switches** களுக்கும், **Routers** களுக்கும் **Hubs** களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கற்றுக் கொள்ளுங்கள். சில தொழில்நுட்பவியலாளர்கள் **Routers, Switches, Hubs,** என்ற சொல்லுகளை பயன்படுத்தும் போக்கினை கொண்டிருக்கிறார்கள். ஒரு நிமிடத்தில் அவர்கள் **Switch** யைப் பற்றி பேசுகிறார்கள். இரண்டு நிமிடங்களின் பின்பு அவர்கள் **Router Settings** யைப் பற்றி பேசுகிறார்கள். இவைகள் எல்லாவற்றுக்கும் ஊடாக அவர்கள் ஒரேயொரு பெட்டியைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த பெட்டிகளுக்கிடையிலான வேறுபாடுகள் என்ன என்பது ஆச்சரியமாக உள்ளது. இந்த மூன்று உபகரணங்களினதும் தொழிற்பாடுகள் மிகவும் வேறுபாடானவை. சில நேரங்களில் ஒரு உபகரணமாக அவைகள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தாலும், எதனை நீங்கள் எப்பொழுது பயன்படுத்துகிறீர்கள்? இதைப் பற்றி சிறிது பார்ப்போம்.


**Hub, Switch, Router** என்ற வரைவிலக்கணம்

**Hub:** ஒரு நெற் வேக்கிலுள்ள உபகரணங்களுக்கான ஒரு பொதுவான இணைக்கும் புள்ளி. ஒரு **LAN** இன் பகுதிகளை பொதுவாக இணைக்கப் பயன்படுத்தப்படுவதே **Hubs** ஆகும். ஒரு **Hub** ஆனது பல **Port** களைக் கொண்டிருக்கிறது. ஒரு **packet xU Port** க்கு வரும்பொழுது அது ஏனைய **Port** களுக்கும் பிரதி செய்யப்படுகின்றது. ஆகவே ஒரு **LAN** இன் எல்லாப் பிரிவுகளும் எல்லா **packet** களையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

**Switch** ஒரு நெற்வேக்கிலே **LAN** பிரிவுகளுக்கு இடையே **packet** களை **filter** பண்ணி, **forward** பண்ணும் உபகரணம் **Switch** ஆகும். இந்த **Switch fshdit data link layer (layer 2)** இலே இயங்குவதுடன் **OSI reference Model** இன் **(3 layer) layer** நெற் வேக்குகளிலும் சிலவேளைகளில் இயங்குகிறது. மேலும் அதன்வழியாக எந்த **packet protocol** யும் ஆதரிக்கிறது. **segments** களை இணைப்பதற்காக **Switch** களைப் பயன்படுத்தும் **LAN** ஆனது **Switch LANs** அல்லது அது ஒரு **Ethernet** வேலையாக இருக்கும்பொழுது **Switch Ethernet LANs** என அழைக்கப்படுகிறது.


**Router** என்பது **network** கள் ஊடாக தரவுப் **packet** களை முன்செலுத்தும் ஒரு உபகரணமாகும். ஒரு **Router** ஆனது ஆகக் குறைந்த இரண்டு **network** களுக்கிடையில் இணைக்கப்படும். பொதுவாக **two LANs** அல்லது **WANS** அல்லது **LAN** மற்றும் **ISP network** இற்குமிடையில். **Router** ஆனவை **gateway** களில் அமைக்கப்பட்டிருப்பதுடன், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட **network** கள் இணையும் இடத்திலுமிருக்கும். **Router** ஆனவை **headers** களை பயன்படுத்துவதுடன், **packet** களை முன்செலுத்துவதற்கான சரியான பாதையைத் தீர்மானிப்பதற்காக **table** களை முன்னோக்கி செலுத்துகிறார்கள். அத்துடன் அவைகள் **ICMP** போன்ற **protocol** களை ஒன்றோடொன்று தொடர்பு கொள்வதற்காகவும், எந்த இரண்டு **host** களுக்கிடையிலே சிறந்த **Router** களை **Configure** பண்ணுவதற்காகவும் உள்ளன.

Hub



ஒரு **NetWork** இலே உள்ள **Hub, Switch, Router** என்பவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகள்

இன்று அநேகமான **Router** களானவை **Swiss Army** யின் கத்திபோல் வந்து விட்டது. ஒரு **Router** உடைய இயல்புகளும் தொழிற்பாடுகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன், **Switch/ Hub** ஒரு தனி அலகாக வந்தது. இந்த உபகரணங்களைப் பற்றிய உரையாடலானது சிறிதளவு தவறாக வழிநடத்துவதாக அமையலாம். விசேடமாக கணினி **NetWork** ல் புதிய ஒருவருக்கு அவ்வாறாக இது இருக்கலாம். **Router, Switch, Hub** இனுடைய தொழிற்பாடுகளானவை ஒன்றிலிருந்து ஒன்று மிகவும் வேறுபட்டன. ஆனாலும் சில வேளைகளில் அவைகளெல்லாம் ஒரு தனி ஒரு உபகரணமாக ஒன்றிணைக்கப்படுகின்றது.




நாங்கள் **Hub** இலிருந்தும் **Switch** இலிருந்தும் தொடங்குவோம். ஏனெனில் **Network** இல் இவ்விரு உபகரணங்களினதும் வகிபங்கு ஒத்ததாக உள்ளது. ஒவ்வொன்றும் ஒரு மத்திய தொடர்பகமாக உங்களுடைய **Network** உபகரணங்கள் எல்லாவற்றுக்கும், ஒரு மத்திய இணைப்பிடமாக உள்ளதுடன், **frame** என அறியப்படும் தரவு வகையையும் கையாள்கிறது. **frame** களே உங்களுடைய தரவுகளை எடுத்துச் செல்கின்றன. ஒரு **frame** பெற்றுக்கொள்ளப்படும் போது பெரிதாக்கப்பட்டு அது சென்றடைய வேண்டிய **PC** யின் **port** க்கு மாற்றி அனுப்பப்படுகிறது. இந்த இரண்டு உபகரணங்களுக்குமிடையிலான பெரிய வேறுபாடு என்னவெனில், இந்த **frame** கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் முறையிலான வெவ்வேறு வேறுபாடுதான். ஒரு **hub** யிலே ஒரு **frame** ஆனது அதனுடைய ஒவ்வொரு **port** களுக்கும் கடத்தப்படுகிறது, அல்லது **broadcast** பண்ணப்படுகின்றது. அந்த **frame** ஆனது **port** ஐ மாத்திரமே முடிவிடமாகக் கொண்டது என்பது அல்ல. இந்த **hub** ஆனது எந்தப் **port** க்கு அந்த **frame** அனுப்பப்பட வேண்டுமென்று பிரித்தறியக்கூடிய வழி எதுவும் அதற்கில்லை. எல்லா **port** ஊடாகவும் அதனை கடத்திச் செல்வதானது, அது சென்றடைய வேண்டிய இடத்தை உறுதிப்படுத்திக் கொள்கின்றது. இதனால் **network** இலே **traffic** ஏற்படுகிறது. அதனால் சில வேளைகளில் **network** இல் குறைந்த பதிற்செயற்பாட்டிற்கு இட்டுச் செல்கின்றது. அத்துடன் ஒரு **10/100Mbps hub** ஆனது அதனுடைய **bandwidth** ஐ அதனுடைய **port** எல்லாவற்றோடும் பகிர்ந்து கொள்ள வேண்டியிருந்தது. ஒரு **PC** மட்டும் **broadcasting** செய்யும்பொழுது இது கிடைக்கக்கூடிய **bandwidth** இன் உயர்ந்த பட்சம் வரை சென்றடைய வேண்டியுள்ளது. பல **PC** கள் **broadcasting** செய்யும்பொழுது அவைகள் எல்லாவற்றுக்குமிடையிலேயே **bandwidth** ஆனது பிரிக்கப்பட வேண்டி ஏற்படுவதுடன் அது செயற்பாட்டுத் திறனின் தரத்தை குறைக்கக்கூடியதாகவும் உள்ளது. ஒரு **switch** ஆனது இணைக்கப்பட்டுள்ள எல்லா உபகரணங்களினதும் **MAC addresses** யைப் பதிந்து பேணிக் கொள்கிறது. இந்தத் தகவல்களுடன் ஒரு **switch** ஆனது எந்த முறைமை எந்தப் **port** இல் இருக்கிறது என இனம் கண்டுகொள்கிறது. ஆகவே ஒரு **frame** பெற்றுக்கொள்ளப்படும்போது அதற்கு எந்தப் **port** க்கு அதை அனுப்ப வேண்டுமென்று அதற்குத் தெரியும். ஆகவே **network** உடைய பதிற்செயற்பாட்டு நேரத்தை குறிப்பாக அதிகரிக்கின்றது. அதேநேரம் ஒரு **hub** போன்று இல்லாமல் **10/100Mbps switch** ஆனது அதனுடைய எல்லா **port** களுக்கும் ஒரு முழுமையான **10/100Mbps** யினை ஒதுக்கிக் கொள்ளும்.

ஆகவே மாற்றியனுப்பப்படும் **PC** க்களின் எண்ணிக்கையை கருத்தில் எடுக்காது பாவனையாளர்கள் உயர்ந்த பட்ச அளவான **bandwidth** யை சென்றடையக்கூடியவர்களாக இருப்பார்கள். இந்தக் காரணங்களுக்காகத்தான் **switch** ஆனது ஒரு **hub** இல் விட மிகச் சிறந்த தேர்வாகக் கருதப்படுகிறது. **Router** ஆனது முற்றிலும் வேறுபட்ட உபகரணங்களாகும். ஒரு **hub** அல்லது **switch transmitting frames** களை அனுப்புவதுடன் சம்பந்தப்பட்டிருக்க **router** இன் வேலையானது, அதனுடைய பெயரிலே சொல்லப்பட்டிருப்பதுபோல **packet** களை **network** இலே அந்தப் **packet** கள் இறுதியாக முடிவிடத்தை சென்றடையும் வரை அவைகளுக்கு வழிகாட்டுவதாகும்.

இந்தப் **packet** களின் ஒரு முக்கிய இயல்பு என்னவெனில், அவைகள் தரவுகளை மாத்திரம் கொண்டிருப்பதில்லை. அவைகள் எங்கே போகின்றன என்ற செல்லுமிடத்தின் முகவரியையும் கொண்டுள்ளன. ஒரு **router** ஆனது வகை மாதிரியாக ஆகக் குறைந்தது இரண்டு **network** களுடன் இணைக்கப்பட்டுள்ளது. பொதுவாக இரண்டு **LAN** களுடனும் அல்லது **WAN** களுடனும் அல்லது **LAN** உடனும் அதனுடைய **ISP network** க்குடனும் இணைக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு உங்களுடைய **PC** அல்லது **workgroup** அல்லது **EarthLink** உடன் இணைக்கப்பட்டுள்ளது. **router** களானவை **gateway** இல் வைக்கப்பட்டுள்ளன. அதாவது இரண்டோ பலவோ **network** கள் இணையும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளன. **headers** யையும் **forwarding tables** யையும் பயன்படுத்தி **packet** களை முன் அனுப்புவதற்கான சிறந்த பாதையைத் தீர்மானித்துக் கொள்கின்றன. **router** களானவை **ICMP** போன்ற **protocols** களைப் பயன்படுத்தி ஒன்றோடொன்று தொடர்பாடல் செய்வதுடன், ஏதாவது இரண்டு **hosts** களுக்கு இடையிலான சிறந்த **route** யையும் **configure** பண்ணிக்கொள்கின்ற **switch ( hub)** மற்றும் **Network Address Translator (NAT)** யையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் அவைகள் வழமையாக ஒரு **Dynamic Host Configuration Protocol (DHCP) server** யையும் உள்ளடக்கியுள்ளன. **Domain Name** களையும் **(DNS) proxy server** மற்றும் பல பரந்தளவு வகையிலான சேவைகளானவைகள் மிகுந்த **broadband routers** களுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. ஒரு **router** ஆனது வகைமாதிரியாக **4 8 port Ethernet**திலிருந்து வரும் தீய நோக்குடைய உட்செலுத்துகைகளிலிருந்து **(malicious intrusion) LAN** யைப் பாதுப்பாற்கான ஒரு வன்மொருள் **firewall** யையும் உள்ளடக்கியிருக்கும். எல்லா **routers** களும் ஒரு **DSL** உடன் அல்லது **broadband** இணையச் சேவைக்காக **cable mode** அத்துடன் இணைக்கும் **WAN Port** யையும் கொண்டிருக்கும். அத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட **switch** ஆனது பயனாளர்கள் இலகுவாக ஒரு **LAN** யை உருவாக்கிக்கொள்ள உதவுகிறது. இவ் வசதியானது எல்லா **PC** களும் **LAN** இல் இணையத்திற்கும், வின்டோஸ் **file** களுக்கும், பிறின்டரைப் பகிர்ந்து கொள்ளும் சேவைகளுக்கும் சென்றடைய அனுமதிக்கின்றது. சில **router** கள் தனித்த **WAN port** மற்றும் தனித்த **LAN port** யைக் கொண்டிருப்பதுடன் அவைகள் ஒரு ஏற்கனவே உள்ள **LAN hub** யையோ அல்லது ஒரு **WAN** இற்கான **switch** யையோ இணைப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. **Ethernet Switch** களும் **hub** களும் **multiple PC ports** களுடன் ஒரு **router** உடன் ஒரு **LAN**யை விரிவாக்க இணைக்கப்படக் கூடியவை. இந்த **router** களதும், **Switch** களதும், **hub** களதும் இயலுமைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த **router** களுக்கும், **Switch** களுக்கும் **hub** களுக்கும் இடையிலான இணைப்பானது நேரடியாகவோ, கடந்த **(crossover) (null-modem) cables** களாகவோ தேவைப்படக்கூடும். சில **router** களானவை **USB ports** களையும் கொண்டுள்ளதுடன், பொதுவாக அவைகளிலே வயரற்ற சென்றடையக்கூடிய புள்ளிகளும் அமைக்கப்பட்டுள்ளது. சில மிக உயர்ந்த தரமான அல்லது வர்த்தக வகுப்பு **router** களானவை தொடரான சில **ports** களையும் உள்ளிணைத்துள்ளதுடன் அவைகள் ஒருவெளிப்புற **dial-up modem** த்துடன் இணைக்கக்கூடியதாகவும் உள்ளன. இது **primary broadband connection** செயற்படாது போகும் நிலையில் ஒரு **Back-u**ப் பயன்பாட்டிற்கு உதவுவதாக உள்ளதுடன், **LAN printer server** மற்றும் **printer port** க்காக உள்ளமைக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளது. இதனோடு இணைந்துள்ள **NAT** ஆல் வழங்கப்பட்ட பாதுகாப்பு இயல்புகளுடன் பல **router** களானவை உள்ளமைக்கப்பட்ட **configure** பண்ணப்பட்ட வன்பொருள் அடிப்படையிலான **Firewall** களையும் கொண்டுள்ளன. இந்த **Firewall** களின் இயலுமைகளானவை அடிப்படையிலிருந்து மிகவும் அதி வசதி கூடியனவான உபகரணங்கள் வரை வீச்செல்லையைக் கொண்டுள்ளது. இந்த இயலுமைகளிடையே உள்ள மிகவும் முன்னேற்றகரமான **router** களானவை **TCP/UDP ports** களை **games** களுக்காக, **chat services** களுக்காகவும் **firewall** க்குப் பின்னாலான **LAN** மீதானவைகளுக்காகவும் **configure** பண்ண அனுமதிக்கின்றன. ஆகவே சுருக்கமாக சொல்வதானால் **hub,** ஆனது **Ethernet network segment** யையும், ஒரு **switch** யையும் ஒன்றாக ஒட்டிக்கொண்டு, பல்வகைபட்ட **Ethernet segment** களை மிகவும் வினைத்திறனுடன் இணைக்கக்கூடியதாக உள்ளதுடன், ஒரு **router** ஆனது இந்தத் தொழிற்பாடுகளையும் அத்துடன் **TCP/IP packets** களை பல்வகை **LAN**களுக்கும் மற்றும் **WAN** களுக்கும் இன்னும் பல வகைகளில் அனுப்பக்கூடியனவாகவும் உள்ளன.



DVD ROM
கணினிக்களம் ஆய்வுத்தொடர் 7 ல்
இமிகிமி
குட்டி மேதை
பயிற்சித்தொடர்
Windows 7
புதியது
வந்தவை
தமிழ்ச்சேவை
செய்தி
வலைப்பூக்கள்
சென்றவை
கோர்தவை
Google
நீங்களும் தமிழில்
SMS அனுப்பலாம்
PC-WAR
Postfach-8
8475 Ossingen
Switzerland
Switzerland
Tel : +41 32 511 411 5
Fax : +41 32 511 411 5
Skype: pckalam
Austria: + 43 72 051 75 62
Srilanka: + 94 77 644 18 86
India: + 91 91 76 29 52 15
வெளியீடு: Microwin Electronics (Pvt Ltd) இற்காக "PC-WAR" Postfach-8,8475 Ossingen,Switzerland